Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, APRIL 23, 2022

சனிக்கிழமை ஏப்ரல் 23, 2022 | ஒளி: 07 கதிர்: 287 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free




# கால எல்லையை நீடித்தது இந்தியா

இலங்கை மத்திய வங்கிக்கான 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணயப்பரிமாற்று கால எல்லையானது இந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில் இந்திய ரிசர்வ் வங்கியால் தற்போதைய நாணயம் சார் ஆதரவாக அக்கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக இந்திய தூதரகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "113 ஆல் முடியாது"



தற்போதைய நிலைமையில் அதிகாரங்களை பாராளுமன்றத்துக்குப் பெற்றுக்கொள்வது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி செயற்படவேண்டும் எனவும், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளைத் தீர்ப்பதற்கு பாராளுமன்றத்தில் 113 ஆசனங்கள் இருந்தால் போதுமானது என கருதிவிடக்கூடாது என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் குறைந்தது 175 முதல் 200 பேரினது ஆதரவு அவசியமானது என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) நாட்டில் நெருக்கடி நிலைமை தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி அமைச்சர், சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளை சந்தித்தமை சிறந்த விடயமே. நிர்மலா சீத்தா ராமனையும் அவர் சந்தித்துள்ளார். இவை வரவேற்கத்தக்கதே. ஆயினும் அரசாங்கத்தின் பயணப் பாதை அவசியமாகும். இதன்படி அடுத்த வாரத்தில் அதனை வழங்க வேண்டும். கடன் சுமையை நாங்கள் எப்படி நிர்வாகம் செய்யப் போகின்றோம் என்பதனை கூற வேண்டும்.

இதேவேளை சீனா தொடர்பிலும் கூறப்படுகின்றது. நாங்கள் ஒருவிடயத்தில் சிக்கியுள்ளோம். மேற்குலக நாடுகள் கடனை வேறு முறையில் கொடுக்கின்றன. வசதிகளை பொறுத்து கடனை கழிக்கவோ, காலத்தை நீடிக்கவோ முடியும். ஆனால் சீனா வேறு முறையில் கொடுக்கின்றது. சீனா அந்தக் கடனை செலுத்தும் வழங்கும் வகையிலேயே கொடுக்கின்றது.

தொடர்ச்சி P2



# வடக்கிலிருந்து 18 பேர் அகதிகளாகச் சென்றனர்

றொசேரியன் லெம்பட்

மன்னார் கடற்பகுதி ஊடாக தமிழகம், இராமேஸ்வரம் பகுதிக்கு 18 பேர் அகதிகளாக வியாழக்கிழமை (21) சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், நீர்வேலி பகுதியை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர், மன்னார், பேசாலை பகுதியில் இருந்து கடல் வழியாக இராமேஸ்வரத்துக்கு அருகிலுள்ள சேராங்கோட்டையை சென்றடைந்துள்ளனர்.

அதேவேளை மன்னாரை சேர்ந்த நான்கு மாத கர்ப்பிணி, உள்ளிட்ட மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர், தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியை நேற்று முன்தினம் (21) இரவு சென்றடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# "13 யை விட்டுக்கொடுக்க முடியாது"

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்ச்சியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) உறுதியாக இருப்பதாக அதன் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

" நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாக தற்போது பரவலாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

# லிட்ரோவின் அறிவிப்பை தடுத்தது அரசாங்கம்




12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயுவின் விலையை நேற்று (22) நள்ளிரவு முதல் 2,500 ரூபாயால் அதிகரிக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்தது.

அதன்படி, லிட்ரோ 12.5 கி. கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலையானது 5,175 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்தது.

அவ்வறிப்பு வெளியாகி ஒருசில நிமிடங்களில், விலை அதிகரிப்பை இவ்வாறு மேற்கொள்ள தாம் அனுமதி வழங்கவில்லை எனவும், நள்ளிரவு முதல் எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிக்காது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# 40 சுயாதீன எம்.பிக்களும் 21க்கு யோசனை

பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கும் 40 எம்.பி.க்கள் அரசியலமைப்பின் உத்தேச 21 ஆம் திருத்த யோசனையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் நேற்று (22) கையளித்துள்ளனர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உள்ளடக்கிய சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரே அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்துக்கான யோசனையை கையளித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ஹிருணிகாவுக்கு கனநாதன் கடிதம்




2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஹிருணிகா பிரேமசந்திராவின் அவதூறான அடிப்படை ஆதாரமற்ற கூற்றை எதிர்த்து கென்யாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியும் உயர்ஸ்தானிகருமான வேலுப்பிள்ளை கனநாதன் கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடந்த ஆண்டு திருப்பதிக்கு சென்ற 17JSH இலக்கம் கொண்ட ஜெட் விமானத்தின் உரிமையாளர் கனநாதன் என ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

மேலும், கனநாதன், விடுதலைப் புலிகளின்

தொடர்ச்சி P2



# 5 பேருக்குப் பிணை; 55 பேருக்கு மே.4 வரை விளக்கமறியல் நீடிப்பு

கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் முக்கியஸ்தரான சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணிவந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், காத்தான்குடி பிரதேசத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த 60 பேரில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஏனையவர்கள் மே 4 ஆம் திகதிவரையிலும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் நேற்று (22) உத்தரவிட்டார்

21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில்,

தொடர்ச்சி P2

# பிரதமரை பதவி விலகுமாறு ஜனாதிபதிக்கு டலஸ் கடிதம்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையும் உடனடியாக பதவி விலக வேண்டுமென ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை நேற்று (22) பிற்பகல் அனுப்பிவைத்துள்ளார்.

பதவி விலகியதன் பின்னர்,

தொடர்ச்சி P2

# கடன் மீள்கட்டமைப்பு குறித்து இலங்கைக்கு ஆலோசனை



நிதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில், இலங்கையின் கடன் மீள்கட்டமைப்பு குறித்த ஆலோசனை பெற்றுக்கொள்ளும் விதமாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

கடன் மீள்கட்டமைப்பு செயற்பாடுகள் குறித்து ஆலோசனையாளரான லீ புக்ஹெய்ட் மூலமாக இலங்கை பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இலங்கை மிகப்பெரிய கடன் நெருக்கடிக்குள் விழுந்துள்ள நிலையில், இந்த மீள் கட்டமைப்பு வேலைத்திட்டமானது மிகவும் அவசியமானதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆரம்பகட்ட ஒத்துழைப்புக்களை

தொடர்ச்சி P2

# "மருந்துகள் இல்லையேல் உயிரே நின்றுவிடும்"

எரிபொருள் இல்லாதுவிட்டால் இயந்திரம்தான் நிற்கும். ஆனால் மருத்துகள் இல்லையென்றால் உயிரே நின்றுவிடும் என்பதனை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22)வெள்ளிக்கிழமை ஒழுங்குப்பிரச்சினை எழுப்பியபோதே, இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், நாட்டில் 520 மருந்து வகைகளின் கையிருப்பு முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான விடயம். எனவே, இந்த மருந்து வகைகளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பது தொடர்பில் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளிக்க சபாநாயகர், சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமனவை அழைத்தபோது அவர் சபையில் இருக்கவில்லை. இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படுமென தெரிவித்தார்.

# கொடிகாமம் விபத்தில் சிறுவன் பலி


எம். றொசாந்த்



யாழ்ப்பாணம், கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற ரயில் - பட்டா ரக வாகன விபத்தில் சிறுவன் உயிரிழந்துள்ளார். அச்சம்பவத்தில் படுகாயமடைந்த மேலுமிருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# மைத்திரியையும் சந்தித்தார் தூதுவர் ஜூலி சங்



முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்த நிலைப்பாடுகளை கேட்டறிந்துகொள்ளும் விதமாகவும், மக்களின் அமைதியான போராட்டத்திற்கான உரிமை உட்பட ஜனநாயகக் கோட்பாடுகளை நிலைநிறுத்துவது மற்றும் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடியதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# "113 ஆல் முடியாது"

இதனால் இந்த விடயத்தில் ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

நிதி அமைச்சர், சர்வதேச நாணய நிதியத்துடன் சந்திப்புக்கு போயுள்ளார். அவர் வந்த பின்னர் அவரின் அறிவிப்பில் என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம். அதுவரை நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்து பிரயோசனமில்லை. 113 ஆசனங்களை கொண்ட அரசாங்கம் இருந்தாலும் இந்தப் பிரச்சனையை தீர்க்க முடியாது. அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் ஆராய்ந்து பார்ப்போம். இந்த சபைக்குள் இருந்துகொண்டு எல்லாம் செய்ய முடியாது என்றார்.

## "13 யை விட்டுக்கொடுக்க முடியாது"

இதுதொடர்பாக, தமிழ் மக்களின் தேசியத் தலைவராக விளங்கிய அமரர் அ. அமிர்தலிங்கம், மலையக மக்களின் தேசியத் தலைவராக விளங்கிய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் முஸ்லிம் மக்களின் தேசியத் தலைவராக விளங்கிய எம்.எச்.எம். அஸ்ரப் ஆகியோர், சிறுபான்மை தேசிய இனங்களின் நலன்களுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சிறந்தது என்ற கருத்தினை வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால், சிறுபான்மை தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் உட்பட பெரும்பாலான அரசியல் தரப்புக்கள், நிறைவேற்று அதிகார முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்து வருகின்றன. தற்போதைய ஜனாதிபதியும் குறித்த நிலைப்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

இந்நிலையில், ஈ. பி.டி.பி. ஆகிய எம்மைப் பொறுத்தவரையில், அரசியல் அமைப்பில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்படினும், தற்போதைய அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்கள் முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளார்.

## 5 பேருக்குப் பிணை; 55 பேருக்கு மே.4 வரை விளக்கமறியல் நீடிப்பு

காத்தான்குடியை சேர்ந்த பலரும், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 69 பேரை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் 4 வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட வழக்கு தாக்குல் மேற்கொண்டனர் இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்னர்.

இதில் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர்,ஆகியோரது வழக்குகள் நீதவான் நீதிமன்றில் இருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன் 5 பேர் வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டதுடன் இருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 60 பேரும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அனுராதபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று (22) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சிறைச்சாலையில் இருந்து பலத்தபாதுகாப்புடன் அழைத்துவரப்பட்ட 9 பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அதில், ஐவர் தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான ரொக்கப்பிணை மற்றும் இரண்டு சரீரப்பிணைகளிலும் விடுதலைச் செய்யப்பட்டனர்.

அத்துடன் மாதாந்தம் 2 ஆம் மற்றும் 3 ஆம் கிழமைகளில் உள்ள ஞாயிற்றுக்கிழமையில் மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொழுத்து இடுமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை ஏனைய 55 பேரையும் தொடர்ந்து மே மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொளி மூலம் நீதவான் உத்தரவிட்டார்.

## 40 சுயாதீன எம்.பிக்களும் 21 க்கு யோசனை

அரசியலமைப்பின் உத்தேச 21 ஆம் திருத்த யோசனையை ஏற்கெனவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் சபாநாயகரிடத்தில் நேற்று முன்தினம் (21) கையளித்துள்ளது. இந்நிலையில், அரசியலமைப்பின் உத்தேச 21 ஆம் திருத்த யோசனையை தானும் கையளித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமரும் தேசியப் பட்டியல் உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவும் சபையில் தெரிவித்தார்.

## பிரதமரை பதவி விலகுமாறு ஜனாதிபதிக்கு டலஸ் கடிதம்

அனைத்துக்கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசாங்கத்தை அமைக்கவேண்டும். அதன் அமைச்சரவை சிறியதாக அமையவேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் இதில் ஆராயப்படவேண்டும்." என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஹிருணிகாவுக்கு கனநாதன் கடிதம்

உறுப்பினர் என்றும், அவர் உகண்டாவில் உள்ள சிலோன் கபேயின் உரிமையாளர் என்றும் கூறிய ஹிருணிகா, விடுதலைப் புலிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் கனநாதனிடம் இருந்ததாகவும் கூறினார். இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை, இட்டுக்கட்டப்பட்டவை என்றும், தனது மலிவான அரசியல் ஆதாயத்திற்காக ஒரு குணநலன் படுகொலைச் செயலைத் தவிர வேறில்லை என்றும் தெரிவித்துள்ள கனநாதன், இவ்வாறு பொய்யான அவதூறு கருத்துக்களை பரப்பியமையை கண்டித்து ஹிருணிகா பிரேமச்சந்திரவிற்கு எதிராக 500 மில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

## கொடிகாமம் விபத்தில் சிறுவன் பலி

கொடிகாமம் தவசிக்குளம் பகுதியை சேர்ந்த தயாபரன் ஜனுசன் (வயது 12) என்ற சிறுவனே- உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுவனின் தந்தை நாகமணி தயாபரன் (வயது 45) மற்றும் உயிரிழந்தவரின் சகோதரனான தயாபரன் தனுஷன் (வயது 15) ஆகிய இருவருமே-படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று (22) வெள்ளிக்கிழமை பயணித்த புகையிரதத்துடன் , கொடிகாமம் மிருசுவில் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள புகையிரத கடவையில் பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

## வடக்கிலிருந்து 18 பேர்...

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவும் , உணப்வு பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கான தட்டுப்பாடு காரணமாகவும் இலங்கையில் தம்மால் வாழ முடியாத லையிலையே- இந்தியாவுக்கு-வந்துள்ளதாக- விசாரணைகளின் போது அவர்கள் தெரிவித்துள்னர்.

18 பேரையும் விசாரணைகளுக்கு உட்படுத்திய பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை மண்டபம் முகாமில் ஒப்படைத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இலங்கையில் வாழ முடியவில்லை என கூறி கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் (21) வரையில் 60 பேர் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு கடல் வழியாக சென்று தஞ்சமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடன் மீள் கட்டமைப்பு...

அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். அதேபோல் கடன் மீள் கட்டமைப்பு தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்தில் முக்கிய கலந்துரையாடல் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களான சாந்த தேவராஜன்,ஷர்மினி கூரே மற்றும் இந்திரஜித் குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது

# அழைப்பு வந்தும் பங்கேற்கவில்லை

### பாதுகாப்புசபை கூட்டம் தொடர்பில் பிரதமர் தெரிவிப்பு

ரம்புக்கனை துப்பாக்கிசூட்டு சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக கூடிய பாதுகாப்புச் சபை கூட்டத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அதில் பங்கேற்கவில்லையென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கூற்று தொடர்பில் பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன ,உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்தபோது கூட்டப்பட்ட பாதுகாப்புக் குழு கூட்டத்திற்கு அன்றைய பிரதமர் அழைக்கப்பட்டிருக்கவில்லை. நாட்டுக்கு மிகவும் பாதிப்பான



ஒரு காலகட்டத்தில் பிரதமர் அழைக்கப்படாமலேயே பாதுகாப்பு சபைக்குழு அன்று கூடியது என்ற கூற்றை முன்வைத்தார்.

இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரம்புக்கனை துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் கூடிய பாதுகாப்பு சபை குழு கூட்டத்திற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அவர் அதில் பங்குபற்றவில்லை என்று கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்தக்கருத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

பதிலளிக்கையில், எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் நான் தான் அந்த அமர்வுக்கு செல்லவில்லை. அன்று பிற்பகல் அங்கு இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் எனக்கு தெளிவுபடுத்தப்பட்டது. என்றார்.

இதன் போது குறுக்கிட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க,உங்கள் வசம் இருந்த பொலிஸ் துறையை நீங்கள் ஜனாதிபதியிடம் வழங்கி விட்டீர்கள் என்பதே உண்மை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

வைப் பார்த்துக் கூறினார்.

# அரசாங்கத்தை போட்டுத்தாக்கிய சஜித்

### தாக்குப்பிடிக்க முடியாது சபையை 10 நிமிடம் ஒத்திவைத்தார் சபாநாயகர்

எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்து ஆற்றிய உரையினால் சபையில் கூச்சல் குழப்பம் ஏற்படவே சபை நடவடிக்கைகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார்.

பாராளுமன்றம் நேற்று (22) வெள்ளிக்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில் விசேட கூற்றை முன்வைத்தது எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தும் பல கேள்விகளை எழுப்பியும் உரை நிகழ்த்தினார்.

சஜித் பிரேமதாஸ இவ்வாறு உரையாற்றியபோது, குறுக்கிட்ட சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நாளாந்த சபை நடவடிக்கைகளை கொண்டு செல்ல ஒத்துழைப்பினை வழங்குமாறு கோரினார். மேலும், பாராளுமனறத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்து, சபையை கேலிக்குள்ளாக்க வேண்டாம் என்றும் எதிர்க்கட்சித் தலைவரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

எனினும், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொடர்ந்தும் அரசாங்கத்தை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்தமையால் ஆளும் தரப்பு எம்.பி.க்கள் எழுந்து நின்று கூச்சலிட்டு எதிர்ப்பினை வெளியிட்டனர்.

# "துப்பாக்கிச் சூடு நடத்துமாறு அறிவுறுத்தவில்லை"

பொதுமக்களால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு தாம் ஆலோசனை வழங்கவில்லையென பொலிஸ் மா அதிபர் சி.டீ விக்ரமரத்ன சாட்சியமளித்துள்ளார்.ம

ரம்புக்கனை துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில், சாட்சியமளிப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு நேற்றையதினம் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர், தனது சாட்சியத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார் என ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் கருணாசிறி தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் மட்டுமன்றி, உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே, ரம்புக்கனையில் துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் சி.டப்ளியு.சி தர்மரத்ன மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பீ. கீர்த்தி ரத்னவினால் ஆலோசனை வழங்கப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் நேற்று (22) தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வார இறுதி மின்வெட்டு விபரம்

வார இறுதியில் நாட்டில் மின்வெட்டை மேற்கொள்ள இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, இன்றைய தினம் 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின் வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, A,B,C,D,,E,F,G,H,I,J ,K,L,M,N,O,P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையிலான காலப்பகுதியில் இரண்டு மணித்தியாலங்கள் மின் வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளது.

மேலும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலான காலப்பகுதியில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்ப்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

அதேபோல், ஞாயிற்றுக்கிழமை (24) அனைத்து வலயங்களுக்கு 3 மணி நேரம் மட்டுமே மின் வெட்டு அமுல்ப்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

அதன்படி, காலை 9 மணி முதல் மாலை 5.20 மணி வரை 1 மணி நேரம் 40 நிமிடங்களும், மாலை 5.20 மணி முதல் இரவு 9.20 மணி வரை 1 மணி நேரம் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்ப்படுத்தப்படும்.

# ஊடகத்துறை அமைச்சர் இராஜினாமா

சில நாட்களுக்கு முன்னர் ஊடகத்துறை அமைச்சராக பதவியேற்ற நாலக்க கொடஹேவா, அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக, அறிவித்துள்ளார்.

நிலையான அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கும் வகையில் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தேன்.

எனினும், அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பட்ஜெட்டை திருத்தி நிவாரணம் வழங்கவும்



பஷில் ராஜபக்‌ஷ முன்வைத்த வரவு -செலவுத் திட்டத்துடன் (பட்ஜெட்) நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது. ஆகவே அந்த வரவு -செலவுத் திட்டத்தை உடனடியாகத் திருத்தி, மூலதன செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தி, மீண்டெழும் செலவாக அதனை மாற்றி மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் பயணப்பாதையொன்று இல்லாமல் அரசாங்கம் பயணிப்பதாகவே தெரிகின்றது. அவ்வாறு பயணப்பாதை இருக்குமாக இருந்தால் அதனை முன்வைக்குமாறும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று (22) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் பயணப் பாதையை நாங்கள் கேட்ட போது, அதன் சாராம்சத்தையாவது முன்வைக்கின்றோம் என்று தினேஸ் குணவர்தன தெரிவித்திருந்தார். ஆனால், அரசாங்கம் அமைதியாக இருப்பதன் மூலம் பொருளாதார திட்டங்களோ, வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வேலைத் திட்டங்களோ, பயணப் பாதையோ இல்லை என்றே தெரிகின்றது. இது தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம்.

இன்று அரசியல் சூதாட்டமே அரசாங்கத்தில் நடக்கின்றது. ஒரு பிரிவினர் ஜனாதிபதியிடம் சென்று, நீங்கள் இருந்து பிரதமர் விலகட்டும் என்று கூறும் அதேவேளை, இன்னுமொரு பிரிவினர் பிரதமரிடம் சென்று நீங்கள் இருங்கள் ஜனாதிபதி விலகட்டும் என்று கூறுகின்றனர். இதுதானா உங்களின் பயணப் பாதை? இதுவா மக்களுக்கு நீங்கள் வழங்கும் பதில்.

இதேவேளை 88 பேர் சேர்ந்து எங்களுக்கு அரசாங்கத்தின் மீது பூரண நம்பிக்கை உள்ளது என்று கூறுகின்றனர். முழு நம்பிக்கைக்கு 113 ஆவது குறைந்தது இருக்க வேண்டும். இரண்டில் ஒன்று எத்தனை என்று தெரியாதவர்களே இருக்கின்றனர். இந்த நாட்டில் மக்கள் வழமையான ஏமாற்று வேலைகளை எதிர்பார்க்கவில்லை. அந்தப் பக்கத்தில் ஏமாற்றுக்காரர்கள் உள்ளனர். நாக பாம்பைக் காட்டி, களனி விகாரையில் நாடகமாடினர். நாங்கள் தடுப்பூசியை கொண்டுவருமாறு கூறும் போது முட்டியை ஆற்றில் போடவும், பாணி மருந்தை காட்டவும் முயற்சித்தனர். இதன்போது தடுப்பூசி விலைகளே அதிகரித்தன. கொரோனாவிலும் கொள்ளையடித்து, பொருளாதார நெருக்கடியிலும் கொள்ளையடிக்கின்றனர்.

ஊழலை ஒழிக்க இந்த அரசாங்கம் எடுக்கும் வேலைத்திட்டம் என்ன? கொள்ளையடித்த பணத்தை மீண்டும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எமது அரசாங்கத்தில் எந்தவோர் அரசியல்வாதியும் தலையிடாத பலமான ஊழல் மோசடி ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்து, மக்கள் பணத்தை அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுப்போம். சுயாதீனமான வரவு செலவு பாராளுமன்ற அலுவலகத்தை அமைக்குமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். 225 பேரும் ஜனாதிபதியின் கூலிகளாக இருக்கக் கூடாது.

இங்கு அரசாங்கத்திற்கு வேலைத்திட்டம் இல்லை. பயணப் பாதையும் இல்லை. பதில் கடமையாற்றும் நிதி அமைச்சர் ஒருவர் இல்லாது உள்ளது. அவரை இந்தப் பாராளுமன்றத்தில் காணவும் இல்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள், உணவுப்பொருட்களின் பற்றாக்குறைக்கும் மருந்து பொருட்களின் தட்டுப்பாட்டுக்கும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன? கூடிய சீக்கிரம் உங்களின் பயணப் பாதையை முன்வைக்க வேண்டும் என்பதுடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் வரையில் போராட்டத்தில் இருப்போம் என்றார்.

## முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப்பின் தீர்க்க தரிசனம் இன்று நடக்கிறது



மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப்பை அப்போது பாதுகாப்பு செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்‌ஷ அவமதித்தபோது, அவருக்கு ஆயர் கூறிய தீர்க்கதரிசனம் இன்று நடந்து கொண்டிருக்கின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) இடம்பெற்ற நாட்டின் நெருக்கடி நிலைமை தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மன்னார், முள்ளிக்குளம் பிரச்சினை தொடர்பில் அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்‌ஷவை அப்போது மன்னார் மாவட்ட ஆயராக இருந்த இராயப்பு ஜோசப்பும் நானும் சந்திக்கச் சென்றோம். பிற்பகல் 3 மணிக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தபோதும் இரவு 7 மணிக்கே கோட்டாபய ராஜபக்‌ஷவை சந்திப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

நீண்ட நேரமாக நாம் காக்க வைக்கப்பட்ட நிலையில் சந்திப்பு இடம்பெற்றபோது, பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்‌ஷ, இராயப்பு ஜோசப் ஆண்டகையை கருத்திற்கொள்ளாமல் அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார்.

இதன்போது “எனது மக்களின் பிரச்சினைகளை பேச வந்தபோது, நீங்கள் அதனை கருத்திற்கொள்ளவில்லை. நான் உயிருடன் இருந்தாலும் இல்லையென்றாலும் நிச்சயமாக ஒரு காலகட்டத்தில் சிங்கள மக்கள் உங்களை தூசிப்பார்கள்” என்று பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்‌ஷவிடம் இராயப்பு ஜோசப் ஆண்டகை நேரில் கூறினார். அன்று இராயப்பு ஜோசப் ஆண்டகை கூறிய தீர்க்கதரிசனம், இன்று உண்மையாகியிருக்கிறது.

அதே பாதுகாப்பு செயலாளரான தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவை இன்று அவரின் சிங்கள மக்களே தூஷிக்கின்றார்கள்; பதவியை விட்டு விலகக் கூறுகின்றார்கள். ராஜபக்‌ஷ குடும்பத்திற்கு எதிராக வீதி வீதியாக போராடுகின்றார்கள் என்றார்.



# “21/4 தாக்குதலின் பின்னணியில் அரசியல் பின்னணிகள்”

ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னால் நிச்சயமாக அரசியல் பின்னணிகள் இருந்திருக்கின்றன எனவும் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகளின் தகவல்கள் மூலம் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22)இடம்பெற்ற, நாட்டின் நெருக்கடி நிலைமை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு பின்னால் அரசியல் சதித்திட்டம் இருப்பதை அரசாங்கம் அடிக்கடி நிராகரித்து வருகின்றது. குறிப்பாக, சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறான தாக்குதல் நடத்தி அரசாங்கத்துக்கு தேர்தலில் வெற்றிபெற எந்த வேவையும் இல்லை எனவும் அதற்கு நியாயமாக



2018இல் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு பாரிய வெற்றி கிடைத்ததையும் சுட்டிக்காட்டினார்.

அப்படியானால் அரசாங்கத்துக்கு அந்தளவு பலம் இருக்குமாக இருந்தால். 2019இல் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவிருந்த நிலையில் 2018இல் பின் கதவால் பிரதமர் பதவியை பெற்றுக்கொண்டு ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொள்ள என்ன தேவை இருந்தது. ஏன் அவ்வாறு செய்தீர்கள் என கேட்கின்றேன். அரசியலமைப்பு முரணாக முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவுடன் இவர்கள் அதிகாரத்தை பெற்றுக்கொண்டனர். அதனால் பிரதமருக்கு இருந்த நன் மதிப்பு இல்லாமல் போனது.

பயங்கரவாதிகளின் தாக்குதல் சம்பவங்களுடன் இடம்பெற்ற சம்பவங்களையும் அத்துடன் இடம்பெற்ற அரசியல் சம்பவங்களை ஒப்புநோக்கி பார்க்கும்போது, ஏதாவது சதித்திட்டம் இருந்ததா என பாரிய சந்தேகம் எழுகின்றது. குறிப்பாக 52 நாள் அரசாங்க காலத்தில் வனாத்தவில்லுவில் பொலிஸ் அதிகாரிகள் இரண்டு பேரின் கழுத்து வெட்டப்பட்டு அவர்களின் ஆயுதங்களை பெற்றுக்கொண்ட சம்பவத்துக்கு பின்னர், இராணுவத்தின் புலனாய்வு பிரிவின் அதிகாரி கால்வாய்குள் விடுதலைப்புலிகளின் தற்கொலை அங்கிகள் இருந்து கண்டு பிடித்ததாக தெரிவித்து, அந்தச் சம்பவத்தை விடுதலைப் புலிகளின் மீது சுமத்தப்பட்டது.

வனாத்தவில்லு சம்பவத்தை விசாரணை செய்வதை தடுக்கவே இவ்வாறு விடுதலைப்புலிகளின் மீது இந்த சம்பவத்தை போட முற்பட்டிருப்பது, ஷானி அபேசேகர நீதிமன்றத்துக்கு தெரிவித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான சம்பவங்களுக்கு உதவியாக இருந்த புலனாய்வு பிரிவின் முக்கிய அதிகாரிகள் சிலருக்கு, விசாரணை அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது. அவ்வாறான அதிகாரிகளில் ஒருவர் இன்று அரச தரப்பு சாட்சியாக மாறியுள்ளார்.

அத்துடன் அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற இன்னும் பல அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. அவை அனைத்தும் தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் வெற்றிக்கு பாதிப்பாக இருந்ததால் இவ்வாறான சம்பவம் ஒன்றுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. விசாரணை அறிக்கைகளில் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்றார்

## இராஜினாமாவை அறிவித்த தலைவர் கோப் குழுவுக்கு மீண்டும் அழைப்பு

கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த போது தனது இராஜினாமாவை அறிவித்த இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மீண்டும் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.



அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) சரித ஹேரத் தலைமையில் கூடிய போதே அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அழைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் அழைக்கப்பட்டிருந்ததுடன் இக்கூட்டத்துக்கு அந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வருகை தருவதில்லை என அன்றைய தினம் வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

கூட்டுத்தாபனத்தின் தலைவர் கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் அதாவது கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்த தினத்துக்கு முன்னைய தினம் தனது இராஜினாமாவை அறிவித்துள்ளதே இதற்கான கரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், இது தொடர்பில் பணிப்பாளர் சபையினதும் அமைச்சினதும் அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை என்பதால் அவரது இராஜினாமா சட்டரீதியற்றது என்பதால் மீண்டும் கோப் குழுவுக்கு அழைக்க நடவடிக்கை எடுத்ததாக குழுவின் தலைவர் இதன்போது தெரிவித்தார். அதற்கமைய, வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தார்.

## அலி சப்ரி நாடு திரும்பியதும் பயணப்பாதை அறிவிக்கப்படும்

நிதி விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடலுக்காக வெளிநாடு சென்றுள்ள நிதி அமைச்சர் அலி சப்ரி, நாடு திரும்பிய பின்னர் அரசாங்கத்தின் பயணப்பாதை தொடர்பில் அறிவிக்கப்படும் என்று சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்தன சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (22) எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்கத்தின் பயணப்பாதை தொடர்பில் வெளியிட்ட கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே தினேஸ் குணவர்தன இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நிதி அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவித்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்களுடன் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காண்பதற்கான நிவாரணங்களை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடு சென்றுள்ளார்.

ஒரு பக்கத்தில் கடனை மீளச் செலுத்துவது தொடர்பான பிரச்சினைகள் இருக்கையில் மறு பக்கத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உள்ளன. இந்நிலையில்



பயணப் பாதையை எதிர்க்கட்சி கேட்கின்றது. நிதி அமைச்சருடன் கலந்துரையாடி அது தொடர்பில் அறிவிக்க முடியும்.

பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றங்கள் குறித்து வொஷிங்டனில் தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. நிவாரணங்கள் வழங்கக் கூடிய அனைத்து தரப்பினரும் அது தொடர்பில் கூறியுள்ளனர். இதன்படி நிதி அமைச்சர் நாடு திரும்பிய பின்னர் அவர் குறித்த விடயங்கள் தொடர்பிலும் பயணப் பாதை தொடர்பிலும் தெரிவிப்பார் என்றார். வேலைத்திட்டத்தின் மிகுதி திட்டங்கள் தொடர்பிலும், அரசியலமைப்பு திருத்தம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் நம்பிக்கையில்லா பிரேரணை இந்த வாரத்தில் கொண்டு வருவதாக கூறினீர்கள். இன்று வெள்ளிக்கிழமை. எங்கே அந்த பிரேரணை என்றார்.

## வாய்மூல விடைகளை ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்குவதில் புதிய நடைமுறை

பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்களை ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்குவதில் புதிய நடைமுறை பின்பற்றப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (22) அறிவித்தார்.

பின்வரிசை உறுப்பினர்கள் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள், பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது தற்போது பின்பற்றப்படுகின்ற முறையின் காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்ற அனைத்து நாள்களிலும் ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வினாக்களைக் கேட்பதற்கான வாய்ப்புகிடைப்பதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

இந்த முறையின் கீழ், பாராளுமன்றத்தில் வினாக்களைச் சமர்ப்பித்துள்ள ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சமவாய்ப்பு கிடைக்கப்படுவதில்லையெனத் தெரிவித்து அவ்வுறுப்பினர்கள் பாராளுமன்ற சபாமண்டபத்திலும் தனிப்பட்ட முறையிலும்



© Parliament of Sri Lanka.

சபாநாயகரிடம் முன்வைத்த எழுத்துமூல மற்றும் வாய் மூலமான கோரிக்கைகள் அண்மையில் நடத்தப்பட்ட பாராளுமன்றஅலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதற்கமைய மே மாதத்தின் முதலாவது பாராளுமன்ற அமர்வு தினம் தொடக்கம், இந்தப் புதிய நடைமுறை செயற்படுத்தப்படும்.

இதற்கமைய வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்கள் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும்போது, கடைப்பிடிக்கப்படும் புதிய நடைமுறை குறித்த சபாநாயகரின் அறிவிப்பு வருமாறு:

1. பாராளுமன்ற அமர்வொன்றில் கேட்கப்படும் வாய்மூல விடைக்கான வினாக்களின் எண்ணிக்கையை 10 வினாக்களாக வரையறுத்தல்.

2. ஒவ்வோர் உறுப்பினராலும் வினாக்கள் கையளிக்கப்பட்டுள்ள வரிசை முறைப்படி முதலாம் வினாவுக்கு முன்னுரிமையளித்து பாராளுமன்றத்தின் அமர்வுகள் நடத்தப்படும் முதல் தினத்தில் முதலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 10 உறுப்பினர்களின் தலா ஒரு வினா வீதம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல்.

3. இரண்டாம் தினத்தில் அடுத்ததாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 10 உறுப்பினர்களின் வினாக்களை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குதல் மற்றும் ஏனைய நாள்களுக்காகவும் மேற்கூறப்பட்ட வகையில் வாய்மூல விடைகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கும் வினாக்களை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்குதல்

4. பதில் வழங்குவதற்காக கால அவகாசம் கோரப்பட்ட வினாக்களைப் பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அடுத்த வாய்ப்பு கிடைக்கப்படும் அமர்வு தினத்தில் அவற்றுக்கு யோக்கியமான முறையில் முன்னுரிமையளிக்கப்படுதல்.

5. இப்புதிய முறையை 2022 மே மாதம் முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்திலிருந்து நடைமுறைப்படுத்துதல்.

மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான

# யோசனைகள்

## நாடளாவிய பெண்ணியவாதிகளின் அமைப்புகள் ஆட்சியாளர்களிடம் அவசர வேண்டுகோள்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com

இலங்கையின் பொருளாதாரம் பெண்களின் உழைப்பிலேயே பெருமளவு தங்கியுள்ளது. ஆனால் ஆலோசனை வழங்கும் அமைப்புகளிலும், தீர்மானம் எடுக்கும் வேளைகளிலும் செயல்முறைகளிலும் பெண்களின் நேரடி ஈடுபாடு கருத்திற்கொள்ளப்படுவதில்லை என்ற ஆதங்கம் இப்போது ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள பெண்ணியவாதிகளின் 21 அமைப்புகளும் மேலும் முன்னிலை வகிக்கும் பெண்ணிலை செயற்பாட்டாளர்கள் 47 பேருமாக இணைந்து ஆட்சியாளர்களுக்கு அவசர வேண்டுகோள்களை முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை அந்த அவசர வேண்டுகோளில் தாம் ஒன்றிணைந்து முன்வைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை, அதன் சுதந்திரத்துக்குப் பின்னரான வரலாற்றில், மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குத் தற்போது முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்று ஆரம்பிக்கும் அந்த அவசர வேண்டுகோளில், உணவுக்கும் எரிபொருளுக்குமான தட்டுப்பாடுகள் அதனைப் பெறுவதற்கான நீண்ட வரிசைகள் மக்களின் வாழ்க்கையை முடக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கை மேலும் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி ஆலோசனைகளை முன்வைக்கிறது.

**நாடளாவிய ரீதியில் உள்ள பெண்ணியவாதிகளின் 21 அமைப்புகளும் மேலும் முன்னிலை வகிக்கும் பெண்ணிலை செயற்பாட்டாளர்கள் 47 பேருமாக இணைந்து ஆட்சியாளர்களுக்கு அவசர வேண்டுகோள்களை முன்வைத்துள்ளனர். இலங்கையில் பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளை, அந்த அவசர வேண்டுகோளில் ஒன்றிணைந்து முன்வைத்துள்ளனர்**

இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட விடயங்களே தற்போதைய நெருக்கடி நிலைக்குக் காரணங்களாகும். எதுவாக இருந்தாலும் பெண்களே இந்த நெருக்கடியை முன்நின்று முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மேலும் அந்த அறிக்கையில், இலங்கையின் பொருளாதாரம் பெண்களின் உழைப்பிலேயே பெருமளவு தங்கியுள்ளது. அதேசமயம், இலங்கையின் பொருளாதாரக் கொள்கையானது, பெண்களின் உழைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பெண்களின் பௌதீக நிலைமைகள், வளர்ச்சி, அபிலாஷைகள் சமூகத்தில் அவர்களது நிலை ஆகிய அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெண்களின் உழைப்பைச் சுரண்டிச் சேகரித்த செல்வம் வீணடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுரண்டலுக்கு எந்தவித பொறுப்புக்கூறலும் இல்லை. மாறாக, பொருளாதார நெருக்கடியின் சுமையை மீண்டும் பெண்கள் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடி, குடும்ப மட்டத்தில் அதிக பாதிப்பைச் செலுத்துவதால் பொருளாதார வீழ்ச்சியின் சுமை எப்போதும் பெண்கள் மீதே விழுகிறது.

பெண்கள் வருமானம் ஈட்டுதல் மற்றும் தங்கள் வீட்டில் ஊதியமற்ற பராமரிப்பு வேலை ஆகிய இரட்டைச் சுமைகளை எதிர்கொள்கின்றனர்.

பெண்கள் தமது பிள்ளைகளின் நலனை உறுதிப்படுத்துவதில் சிரமப்படுகிறார்கள். இதற்கு கல்விக்கான தடங்கல், வீட்டு வன்முறை தனித்தாய்மார்களின் பராமரிப்புக் கொடுப்பனவுகளுக்கான செயற்றிறனற்ற நியாயமற்ற முறைமைகள் என்பன காரணங்களாகும்.

பொருளாதார வீழ்ச்சி, நிச்சயமற்ற தன்மை, பசி, அடிப்படை வசதிகள் இல்லாமை பற்றிய ஏமாற்றங்கள் அச்சங்கள் என்பவை வீட்டிற்குள்ளேயே வன்முறையாக வெடித்து, பெண்களையும் பிள்ளைகளையும் பாதிக்கின்றன.

குடும்பத்தின் மீதான பலதரப்பட்ட அழுத்தங்களின் விளைவாக குடும்ப வன்முறை அதிகரித்து வருகிறது. ஏற்கெனவே வன்முறையில் வாழும் பெண்களுக்கு இன்னும் கடினமான சூழ்நிலையை இது உருவாக்கியுள்ளது.

பெருந்தோட்டம், ஆடை உற்பத்தி ஆகிய துறைகளில் பணிபுரிதல் வெளிநாடுகளில் வீட்டு வேலைத் தொழிலாளர்களாக வேலைசெய்தல் என்பவற்றால் பெண்கள், அதிக அந்நியச் செலாவணியை நாட்டுக்குள் கொண்டுவருபவர்களாக உள்ளனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றமானது, இந்த நெருக்கடி நிலைமை ஏற்படும் முன்னரே ஏழைகளை வாழ்வா சாவா என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஏற்கெனவே பல வாரங்களாக நீடித்த இந்த நிலைமையானது, தற்போது பாரிய அரசியல் அதிகாரச் சிக்கலாக உருவெடுத்துள்ளது. அதனடிப்படையில் அரசியல் வர்க்கத்துக்கு எதிரான மக்களின் ஆழ்ந்த உணர்வுகளை கண்டுணரக் கூடியதாகவுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் சாதாரண மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராட்டங்கள் தொடர்கின்றன. முழுமையாக நோக்குமிடத்து, ஒரு மனிதாபிமான நெருக்கடி நிலை உருவாகி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்த நிலைமை அதிகமான மக்களை வறுமைக்குள் தள்ளவும், சமூக ஏற்றத் தாழ்வுகளை இன்னும் வலிமையடைச் செய்து, நாட்டை பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லவும் வழிவகுக்கும்.

நீண்டகால போர், சுனாமி, ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் கொவிட்-19 பெருந்தொற்று ஆகிய தொடர்ச்சியான சம்பவங்களால் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் தமது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகளில் மீண்டுமொரு பேரிடிக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது. இதற்கு மத்தியில், உண்மை மற்றும் நீதிக்கான தேடலும் ஒவ்வொரு நாளும் தொடர்கின்றது.

இந்நிலையில், அரச சேவைகளை தனியார் மயமாக்கும் முயற்சிகள் பொருளாதாரச் சுமையை மக்கள் மீது மேலும் அதிகமாக சுமத்திவிடும் என நாம் அஞ்சுகிறோம்.

ஏழைகள், வறுமையில் வாடும் பிற சமூகங்கள் அத்தோடு சமூகத்தில் ஏற்கெனவே இன, மத, சாதி, பால்நிலை பாரபட்சங்களால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த வலுப்பெற்றுவரும் நெருக்கடியால் இன்னும் அதிகம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர்.

மக்கள் வீடற்ற நிலைமையிலும், வறுமைக்கு முகங்கொடுத்துக் கொண்டும் வாழ்கின்றனர். இந்தப் பின்னணியில், பட்டினியையும் இடர்பாடுகளையும் தடுப்பதில் கவனம் செலுத்தி, தேசிய அளவிலான மனிதாபிமான செயற்பாட்டு முன்னெடுப்பை அவசரமாக ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

அரச இயந்திரமானது மக்களின் பொதுநலன் சார்ந்த கடமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இந்தத் தேவையை வினைத்திறனுடன் சந்திக்கக் கூடிய, சிவில் ஜனநாயகத்தையும் மக்களுடைய நம்பிக்கையையும் கட்டியெழுப்பக்கூடிய வகையிலான அடிப்படை ஆட்சி நிர்வாகம் ஒன்று நாட்டு மக்களின் உடனடித் தேவையாகவுள்ளது.

நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

நாடளாவிய ரீதியில் உணவு விநியோக முறைமையொன்றைத் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தி, அடிப்படை அத்தியாவசிய உணவுப் பொதிகள் அனைத்து வீடுகளுக்கும் சென்றடையச் செய்ய வேண்டும்:

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் மேலும் கடனுதவி கோருவது என்பது வருத்தமளிக்கிறது.

நேரடி வரி அதிகரிப்பு போன்ற பிற்போக்கான வரிக் கொள்கைகள் பொதுச் செலவினை குறைப்பது போன்றன உற்பத்தித்திறன் மேம்பாடுகளை பாதிப்பதுடன், சமூக உட்கட்டமைப்பு உள்ளிட்ட பங்கேற்பு பொருளாதார வளர்ச்சிக்கான நிலையை மேலும் நிலைகுலையச் செய்யும்.

மனித உற்பத்தித்திறனுடன் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு சுகாதாரம், கல்வி பராமரிப்பு ஆகிய சேவைகளில் போதிய முதலீடு செய்தல் அவசியமாகும்.

**நாட்டின் பல பாகங்களிலும் சாதாரண மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராட்டங்கள் தொடர்கின்றன. முழுமையாக நோக்குமிடத்து, ஒரு மனிதாபிமான நெருக்கடி நிலை உருவாகி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்த நிலைமை அதிகமான மக்களை வறுமைக்குள் தள்ளவும், சமூக ஏற்றத் தாழ்வுகளை இன்னும் வலிமையடைச் செய்து, நாட்டை பல ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லவும் வழிவகுக்கும்**

இதனூடாக பெண்கள், உழைக்கும் மக்கள் விளிம்பு நிலைக்குள்ளாக்கப்பட்ட நிலையில் வாழும் சமூகங்களின் மனிதம் அழிக்கப்பட்டு, அவர்களின் அழுத்தமான துன்பங்களை உள்வாங்காத தீர்வுகளே முன்வைக்கப்படுகின்றன.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழலை ஒழித்து முற்போக்கான வரிக் கொள்கைகளை அறிமுகப்படுத்தாமை போன்ற விடயங்கள் கவனிக்கப்படாமலும், தீர்வு காணப்படாமலும் இருக்கின்றன.

மருந்துகள், ஏனைய அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள், சுகாதாரப் பொருட்கள் மகப்பேற்று சுகாதார சேவைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும், அவற்றை வழங்குவதற்கும் சுகாதாரத் துறைக்கு அரசாங்கம் உதவி செய்தல் வேண்டும்.

பட்டினி, வீடற்ற நிலை, வறுமை குடும்ப வன்முறை ஆகியவற்றுக்குத் தீர்வை வழங்கக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் தேவை.

இவை எல்லாவற்றையும் விட இந்த நெருக்கடிக்குப் பதிலளிப்பதற்குப் பெண்களின் ஆலோசனையும் பங்கேற்பும் தேவை.

ஆலோசனை வழங்கும் அமைப்புகளிலும், செயல்முறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இறுதியாக, நமது ஒட்டுமொத்த எதிர்காலத்தையே அழித்துப்போடும் அச்சுறுத்தலான இந்தமனிதாபிமான அவசரநிலைக்கு பதிலளிக்கும் பொருட்டும், உடனடி நடவடிக்கையை முன்னெடுக்கும் பொருட்டும், பெண்கள் குழுக்கள், தொழிற்சங்கங்கள், விவசாயிகள், மீனவர்கள் கூட்டமைப்புகள், கூட்டுறவு சங்கங்கள், சமய நிறுவனங்கள், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் முற்போக்கு அரசியல் அமைப்புக்கள் ஆகிய அனைவரையும் இத்தோடு ஒருங்கிணைந்து கொள்ளுமாறு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.



கந்தளாய் குளம் உடைத்து 36 வருடங்கள்:

# கண்ணீர் கதைகள்



எப். முபாரக்

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற நன்னீர் குளங்களுள் கந்தளாய் குளம் மிகப்பெரிய குளமாக காணப்படுகின்றது. இக் கந்தளாய் குளமானது கந்தளாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்து காணப்படுகின்றது.

கந்தளாய் குளத்தினை குளக்கோட்டன் மன்னன் கட்டியதாகவும்,கி.மு 19 ஆம் நூற்றாண்டில் முதலாம் அக்போ மன்னனால் அத்திவாரமிடப்பட்டு, இரண்டாம் அக்போ மன்னனால் கந்தளாய் குளம் கட்டி முடிக்கப்பட்தாக வரலாறுகள் கூறுகின்றன.

கந்தளாய் குளத்திற்கு போதுமான நீர் மின்னேரிய, மகாவலி ஆறுகள் கூடாக வந்து சேருகின்றன. கந்தளாய் குளத்து நீரினைப் பயன்படுத்தி, ஆரம்ப காலங்கள் தொட்டு இற்றை வரை தம்பலாகாமம், முள்ளிப்பொத்தானை, வான்எல, வட்டுக்கச்சி, கிண்ணியா, ஜயந்திபுர, சூரியபுர போன்ற பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கந்தளாய் குளம் 1986 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி உடைப்பெடுத்ததனால் 120க்கும் மேற்பட்ட உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் பலர் மயிரிழையில் தப்பி, தற்போதும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதில் தமிழ், சிங்களம், முஸ்லிம் உறவுகள் பலரும் பலியாகி இருக்கின்றார்கள். இதன்போது, கந்தளாய் பிரதேசம் பாரிய அழிவுகளுக்கு முகம் கொடுத்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

கந்தளாய் குளம் உடைப்பெடுத்த பொழுது, நீர் மட்டம் 15 அடி காணப்பட்டதாவும் இதனால் நீரின் வேகம் அதிகரித்ததால் கந்தளாய் குளம் உடைந்ததாக வரலாற்று பதிவுகள் சான்று பகிர்கின்றன.

இதன் போது 1,620 வீடுகள் சேதமானதோடு,2,000 க்கும் அதிகமான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டன. 2,000 க்கும் மேற்பட்ட மக்கள் இந்த வெள்ள அனர்த்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டார்கள். இந்தப் பேரழிவு அக்காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட பாரிய அனர்த்த உயிர்ச் சேதமாக பேசப்பட்டது.

இந்தக் குளம் உடைப்பின் பிற்பாடுதான், கந்தளாய் குளம் விசாலமாக்கப்பட்டு தற்போதுள்ளவாறு காணப்படுகின்றது. இக்குளத்தில் கீழ், தற்போது 16 ஆயிரத்து 800 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கந்தளாய் குளத்தில் நீர்மட்டம் அதிகரிக்கின்ற போது சரியான நேரத்தில், மேலதிக நீரை வெளியேற்றி நீர்மட்டத்தினை சமநிலைப்படுத்துகின்ற செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. மீண்டுமொரு தடவை கந்தளாய் குளம் உடைப்பெடுக்காது, அணைக்கட்டுகள் இறுக்கமான நிலையில் அனைத்துப் பக்கமும் அமைந்து காணப்படுகின்றது.

இந்த அனர்த்தம், கந்தளாய் வாழ் மக்களுக்கு ஆறாத வடுக்களாகவே இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றது. இவ்வனர்த்தம் ஏற்பட்டு இற்றைக்கு 36 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. 36 வருட நினைவையொட்டி கந்தளாய் பிரதேசத்தில் பல்வேறு விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றுள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வு புதன்கிழமை (20) கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நினைவு கூரப்பட்டு விசேட பிராத்தனைகளும் இடம்பெற்றன. அதேவேளை, அன்றைய தினம் கந்தளாய் சிவன் கோவிலிலும் மரணித்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய விசேட பூஜைகள் இடம்பெற்றன.

கந்தளாய் குளம் உடைப்பின் பேரழிவுகளையும் அதில் இறந்தவர்களையும் ஒவ்வோர் ஆண்டும் நினைவு கூர்வது, ஒவ்வொருவரின் கடமையுமாகும்.











# முத்து நகரை பந்தாடும்

## திருகோணமலை துறைமுக அதிகார சபை


ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ஒரு மீள் குடியேற்றக் கிராமமே முத்து நகர் கிராமமாகும். இக் கிராமமானது கண்டி - திருகோணமலை பிரதான வீதியில் இருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

1962 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்த நிலையில், 1990 களில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து, மீண்டும் 2006ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட நிலையில் 184 குடும்பங்கள் தற்போது வரை வாழ்ந்து வருகிறார்கள்.

பல வருடங்கள் குடியேற்ற திட்டம் ஊடாக வாழ்ந்து வந்தாலும், குடியிருப்பு காணிகளை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தம் என துறைமுக அதிகார சபையினர் அப்பகுதியை அபகரிப்பு செய்ய முற்படுகின்றனர்.

குறித்த கிராமத்தில் விவசாய காணி 300 ஏக்கரும் குடியேற்ற காணி 200 ஏக்கரும் என அண்ணளவாக காணப்பட்டாலும், தங்களுக்கு உரித்தான காணி என துறைமுக அதிகார சபையினர் மக்களை அச்சமூட்டி எச்சரிக்கை விடுக்கின்றனர்.

அப் பகுதியில் துறைமுக அதிகார சபையினர், கல் இட்டும் பதாகைகள் இட்டும் காட்சிப்படுத்தியுள்ளனர். கடந்த வாரமளவில், பயிர்ச் செய்கைக்காக சுத்தப்படுத்திய ஐந்து அப்பாவிகளை, காடு வெட்டியதன் குற்றச்சாட்டில் பொலிஸார் கைது செய்ததாகவும் அப்பகுதி குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழையை நம்பிய விவசாய செய்கை, சேனை பயிர் செய்கை போன்ற தோட்டச் செய்கையில் ஈடுபடும் மக்களை, வலுக்கட்டாயமாக அச்சுறுத்தி தங்களது காணி என திருகோணமலை துறைமுக அதிகார சபையினர் அடிக்கடி வந்து எச்சரிக்கை விடுப்பதாகவும் அக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் கூலித் தொழில் மூலமே, அன்றாட ஜீவனாம்சத்தை கொண்டு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அம் மக்களை கவலை வெளியிடுகின்றனர்.

குறித்த கிராமத்தில் வசிக்கும் 184 குடும்பங்களும், பிரதேச செயலகம் ஊடாகவே குடியேற்றப்பட்டார்கள். இவர்கள் பல வருடங்கள் வாழ்ந்து வந்தாலும், காணிக்கான எந்த வித உரித்து படிவங்களோ, இதைப் பெற காணிக் கச்சேரிகளோ இற்றை வரைக்கும் நடைபெறவில்லை என அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

மீள் குடியேற்றக் கிராமங்களை இவ்வாறு நில அபகரிப்புக்கு உட்படுத்துவது தொடர்பில், மக்களின் நிம்மதியற்ற வாழ்க்கையுடன் இப்பகுதியும் அபிவிருத்தியின்றித் தொடர்கின்றது.

உட்கட்டமைப்பு வசதிகள், பொது அரச சேவைகளை பெற கூடிய எதுவுமே இங்கில்லை.









அரச சேவைகளை பெற வேண்டுமானால் சுமார் 30 கிலோ மீற்றர் திருகோணமலை நகருக்கு செல்ல வேண்டியுள்ளது. குறித்த கிராமத்துக்குள் காட்டு யானைகளின் தொல்லை தொடர்ந்தும் காணப்படுகிறது.

தொடர்ச்சியான காணி அபகரிப்பு தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த போதும், நிரந்தர தீர்வு கிட்டவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். துறைமுக அதிகார சபையினரின் அடிக்கடி உரிய கிராமத்துக்கு வந்து தங்களை எச்சரித்து விட்டு செல்வதாகவும் இதனால் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாது, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார்கள்.

SLPA என்று எல்லையிடப்பட்ட கற்கள் போடப்பட்டு, கிராமத்தை முற்று முழுதாக தங்கள் வசப்படுத்திக் கொள்ள நினைக்கும் திருகோணமலை துறைமுக அதிகார சபையினர் மீள்குடியேற்றக் கிராமத்தில் கைவைப்பது ஏன் என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இது தவிர, முத்து நகர் கிராம பிரதான வீதிக்கு முன் உள்ள சுமார் 75 ஏக்கர் மக்களுக்கு சொந்தமான காணிகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அடாத்தாக செயற்பட்டுள்ளனர்.

இதில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. குடியேற்றக் காணிகளுக்குள் அடாத்தாக அத்துமீறி, மக்கள் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்த நாட்டில் சிறுபான்மை இன மக்கள் மீது மட்டுமே காணிகளை அபகரிப்புச் செய்யும் சதித் திட்டங்களில் இருந்து எப்போது தான் விலகப்போகிறார்களோ என்ற மன ஏக்கமும் மக்கள் மத்தியில் குடி கொண்டுள்ளது. எனவே தான், முத்து நகர் கிராம மக்கள், எப்போது தீர்வு கிடைக்கும் என ஏங்கித் தவிக்கின்றனர்.

தங்களுக்கான சொந்தக் காணிகளுக்கான அரச உரித்து படிவங்களை பெற அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறும் உரிய தரப்புக்களுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

இது வேளை, ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கோரி ஆர்ப்பாட்டமும் அண்மையில் (2022.03.31) திருகோணமலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட தி/ முத்து நகர் முஸ்லிம் வித்தியாலய முன்றலில் இடம் பெற்றது.

“மாற்றாதே மாற்றாதே ஆசிரியரை மாற்றாதே” , “வேண்டும் வேண்டும் ஆசிரியர் வேண்டும்”, “ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்” போன்ற வாசகங்களை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பியிருந்தனர். குறித்த பாடசாலையில் தரம் 09 வரை காணப்படுகின்றது. தற்போது ஆறு ஆசிரியர்களே கற்பித்து வருகிறார்கள். இந்தப் பாடசாலை பின்தங்கிய நிலையில் உள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றபோதிலும் பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. 2019இல் இரண்டு ஆசிரியர்களும் 2020இல் இரண்டு ஆசிரியர்களும் 2021இல் மூன்று ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றார்கள். அதிபரை இடமாற்றம் செய்தமையால், தற்போது பதில் அதிபராக ஆறு ஆசிரியர்களில் ஒருவர் கடமையாற்றுவதனாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

தரம் 2,3 க்கான நிரந்தர ஆசிரியர்கள் பல மாதங்கள் இல்லாத நிலையிலும் கல்வி நடவடிக்கைகள் பின்னோக்கி செல்வதாகவும் இது தொடர்பில் உரிய கல்வி அதிகாரிகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலமாக தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பெற்றோர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாடசாலை தரம் 9 வரை மட்டுமே தற்போது உள்ளது. இதனை தரம் 11 வரையாவது தரமுயர்த்தித் தருமாறும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. பின்தங்கிய இப்பாடசாலையில் தரம் ஒன்பது வரை கற்று, உயர் கல்விக்காக தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாணவர்களுக்கு இதன் ஊடாக பாதுகாப்பின்மை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பல தரப்பட்ட குறைகளுடன் வாழும் இம் மக்களின் எதிர்கால நலனுக்காக, சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் யார் கையில் உள்ளது என முத்து நகர் கிராமவாசிகள் அங்கலாய்க்கின்றனர்.




---

### காசநோயைக் கட்டுப்படுத்துவது

# காலத்தின் தேவை


வ. சக்திவேல்
shagthivel@gmail.com






மட்டக்களப்பு மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்தியதிகாரி டொக்டர். ஆரணி கோணேஸ்வரன் தெரிவித்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

‘மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு’ உடலுக்கு மாறுபாட்டைச் செய்யாத உணவையும், தன் மனம் விரும்பியபடி அல்லாமல் நோய் வராத அளவாக உண்டால் அவருக்கு பிணிகளால் துன்பமில்லை என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் காசநோய் காரணமாக 47 பேர் மரணித்துள்ளனர். அக்காலப்பகுதியில் 398 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2019ஆம் ஆண்டு 147 பேர் அனுமதிக்கப்பட்டு 17 பேர் மரணித்துள்ளனர், 2020இல் 127 பேர் அனுமதிக்கப்பட்டு 19 பேரும் 2021இல் 124 பேர் அனுமதிக்கப்பட்டு 11 பேருமாக 47 பேர் இறந்துள்ளனர்.

சுவாசப்பையில் தொற்றுக்குள்ளான நோயாளி, ஒருவருட காலத்தில் தன்னுடைய செயற்படுகளை செய்து கொண்டிருப்பவராக இருந்தால் அந்த ஒருவருட காலத்திற்குள் 10 தொடக்கம் 15 நோயாளிகள் அவரிடமிருந்து உருவாகுவார்கள். எனவே, நோயாளிகளை இனம்கண்டு சிகிச்சை வழங்குவதுதான் ஒரே வழியாகும். ஆனால் மக்கள் பொதுமக்கள் அதிகம் நடமாடும் இடங்கள் உள்ளிட்ட பல இடங்களிலும் எச்சில் உமிழ்வதை முற்றாகத் தடுக்க வேண்டும்.

மேலும் சுவாசப்பை காசநோய்க்குட்டு ஆளாகியிருக்கின்ற ஒருவரை ஆரம்ப அறிகுறிகள் தென்படும் போதே இனம்கண்டு, பரிசோதனைக்குட்படுத்தி அவர் நோயாளியாக அடையாளப் படுத்தப்படுபவராக இருந்தால் அவரை உடனடியாக தாமதமின்றி சிகிச்சை பெறுவதற்குச் செல்ல வேண்டும்’ என மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன..

இந்நிலையில் உலகளாவிய ரீதியில் பாரிய சவாலாக விளங்கும் ஒரு தொற்று நோயாக காசநோய் அமைகின்றது. இக்கிருமித் தொற்று நீண்டகாலப் போக்கிலேயே உருவாகுவதனால் இந்நோய்பற்றியோ அதனுடைய பாரிய தாக்கத்தைப் பற்றியோ மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு காணப்படுவதில்லை. இதனாலேயே இந்நோயைக் கட்டுப்படுத்துவது என்பது தொடர்ந்தும் ஒரு சவாலாக உள்ளது.

2035ஆம் ஆண்டளவில் காசநோயை முற்றாக ஒழிக்கும் நோக்கை (காசநோயாளர்களின் எண்ணிக்கையை 10:100000 மக்கள் தொகை என்ற நிலைமைக்குக் கொண்டு வருதல் மற்றும் காசநோயால் ஏற்படும் இறப்பு, பின்விளைவுகள் பொருளாதார பின்னடைவுகளை இல்லாதொழித்தல்) இலக்காகக் கொண்டு, உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டலில், காசநோய் கட்டுப்பாடு மற்றும் சுவாசநோய்களிற்கான தேசிய செயற்திட்டம் (NPTCCD) ஆனது நாடளாவிய ரீதியில் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

“மைக்கோபக்ரீரியம் ரியுபக்குலோசிஸ்(Mycobacterium Tuberculosis) என்கின்ற பக்ரீரியாவால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு தொற்றுநோய்தான் காசநோய் எனப்படுகின்றது. இது ஒரு பரம்பரை நோயல்ல. குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்படுவது நுண்ணங்கித் தொற்றினாலேயே ஏற்படுகின்றது.

சுவாசப்பைக் காசநோய்ப் பாதிப்புக்கு உள்ளான நோயாளி ஒருவர் இருமும்போதோ, தும்மும்போதோ சத்தமிட்டு சிரிக்கும்போதோ வெளியேற்றப்படும் சளித்துணிக்கைகளுடன் வெளியேறும் நுண்ணங்கியானது வேறு ஒரு சுகதேகியின் உட்சுவாசத்தின் போது உள்ளெடுக்கப்படுவதன் மூலம் அவரது சுவாசப்பையை சென்றடைவதனால் தொற்றை ஏற்படுத்துகின்றது.

இந்நுண்ணங்கியானது சுவாசப்பையை தாக்குவதன் மூலமே பெரும்பாலும் (80) நோயை ஏற்படுத்துகிறது. எனினும் இது உடலில் தலைமயிர், நகம் தவிர்ந்த எந்த அங்கத்தையும் பாதிப்பதன் மூலம் நோயை உருவாக்க முடியும். (20)தொற்று ஏற்பட்டவர்கள் அனைவருக்கும் இந்நோய் ஏற்படாது.

தொற்றாளர்கள் அனைவரும் நோயாளர்கள் ஆகுவதில்லை. உலகசனத் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் இந்நோய்தொற்றுக்கு உள்ளாகி இருப்பதற்கான சந்தர்ப்பம் உள்ள போதும் அவர்களில் 5 - 10 சதவீதமானவர்களே நோயாளியாகும் சந்தர்ப்பம் உள்ளது.

உள்ளெடுக்கப்பட்ட நுண்ணங்கித் தாக்கத்திலும் நோயாளியின் நோயெதிர்ப்பு சக்தியிலும் தங்கியுள்ளது. நுண்ணங்கித்தாக்கத்தின் அளவு கூடுதலாக அமைந்து, நோயெதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளபோது நோய்வரும் சந்தர்ப்பம் அதிகமாகும்.

போசனைக்குறைபாடு, எயிட்ஸ் கிருமித்தொற்று, நீரிழிவு, நீண்டகால சுவாச நோய்கள், சிறுநீரகப்பாதிப்பு போன்ற நோய் நிலமைக்குள்ளானவர்களும் புற்றுநோய் மற்றும் நீண்டநாள் மூட்டு நோய்களுக்கான சிகிச்சையில் உள்ளவர்களும் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் சிகிச்சை பெறாத சுவாசப்பைக் காசநோயாளியுடன் நேரடித்தொடர்பு உள்ளவர்கள், சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், சிறைச்சாலை, வயோதிபர் இல்லம் போன்ற கூட்டாக பலர் இருக்கும் இடங்களில் வசிப்பவர்கள் போன்றோருக்கு இலகுவில் கிருமி தொற்றிக்கொள்ளும் வாய்ப்புகள் உண்டு.

மாண்டு (Mantoux) என்கின்ற ஊசிப்பரிசோதனை மூலமாகவோ அல்லது இக்ரா (IGRA) என்று சொல்லப்படுகின்ற இரத்தப்பரிசோதனை மூலமாகவோ பெரும்பாலும் அறிந்து கொள்ள முடியும். ஆனால் இப்பரிசோதனைகள் மூலம் தொற்றை மட்டுமே உறுதி செய்ய முடியும்; நோய் உருவாகியுள்ளதை உறுதிப்படுத்த முடியாது.

தொற்றாளி ஒருவர் நோயாளி ஆகும் போது, அவருடைய உடலில் படிப்படியாக நோய் அறிகுறிகள் தென்படத் தொடங்கும். அவையாவன, இரண்டு கிழமைகளுக்கு, மேற்பட்ட தொடர்ச்சியான இருமல். மாலை, இரவு வேளைகளில் காய்ச்சல். இரவில் அதிக வியர்வை; அதிக களைப்பு. பசிஇன்மை, உடல் மெலிவு, நெஞ்சுப்பகுதியில்வலி, மூச்சு எடுப்பதில் சிரமம், சளியுடன் இரத்தக்கசிவு ஏற்படல், பாதிக்கப்பட்ட உறுப்பைப்பொறுத்து வேறு அறிகுறிகளும் அமையும். அந்த வேளைகளில் பரிசோதனைகளை மேற்கொள்வதனால் ஆரம்ப நிலையிலேயே நோயை இனம்காண முடியும்.

இந்நோய்க்கான ஆரம்ப பரிசோதனைகளாவன சளி மாதிரிகளை நிறமூட்டி நுணுக்குக்காட்டியில் பார்வையிடல். சளியில் காசநோய் கிருமி இருப்பின் நுணுக்குக்காட்டியில் தென்படும். இதற்காக, அதிகாலையில் நோயாளியிடமிருந்து பெறப்படும் சளிமாதிரி உட்பட மூன்று மாதிரிகள் பெறப்படும்.




நெஞ்சுப்பகுதியை Xray படம் எடுப்பதன் மூலம் சுவாசப்பை மற்றும் அதனைச்சூழ உள்ள பகுதிகளில் காசநோயால் ஏற்படும் பாதிப்புகளை ஆரம்ப நிலையிலேயே அறிய முடியும். சளி மாதிரியை Gene xpert / TB PCR என்ற மரபணுப்பரிசோதனைக்கு உட்படுத்தல். இது விரைவானதும் துல்லியமானதுமான ஒரு பரிசோதனை. சளிமாதிரியை காசநோய்க்கிருமிக்கான வளர்பூடகத்தில் இட்டு பரிசோதித்தல்.

இந்நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும். தொடர்ச்சியாக ஆறு மாத காலங்களுக்கு இடைவிடாது நாளாந்தம் மருந்துகளை உட்கொள்வதன் மூலம் நோயைக் குணப்படுத்த முடியும். இந்நோய்க்கான முற்றான சிகிச்சையை மாவட்டமார்பு நோய்சிகிச்சை நிலையங்களில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். வேறு எந்த அரசவைத்தியசாலையிலோ அல்லது தனியார் மருந்தகங்களிலோ இம்மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. இலங்கையில் இவ்வாறான 26 சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏதாவது ஒரு மார்புநோய் சிகிச்சை நிலையத்திலேனும் நோயாளி தனது வசதிக்கேற்ப சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். இடைவிடாத சிகிச்சை என்பது மிக முக்கியம் என்பதால், அதை உறுதிப்படுத்தும் வகையில் DOT சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒருவருடைய நேரடிக்கண்காணிப்பில் நோயாளி சிகிச்சையை மேற்கொள்வதனால் இடைவிடாத சிகிச்சை முறை உறுதிப்படுத்தப்படுகிறது.

மதுபானம், புகைத்தல், போதைப்பொருள் பாவனையை முற்றாகத்தவிர்த்தல். போன்ற சாதாரண சுகாதார பழக்க வழக்கங்களை அனைத்து மக்களும் முறையாக கடைப்பிடிப்பதன் மூலம் இந்நோய் தொற்றுவதில் இருந்தும் நோய் ஏற்படுவதில் இருந்தும் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

சமூகத்தில் இந்நோய்சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இந்நோய் தொடர்பாக மக்களிடையே காணப்படுகின்ற மூடநம்பிக்கைகள் அகற்றப்பட்டு, இது ஒரு சாதாரண தொற்றுநோய் என்பதும் இந்நோயானது முற்றாகக் குணப்படுத்தக்கூடிய நோய் என்பதும் மக்களுக்கு அறியப்படுத்தப்பட வேண்டும்.

எம்மத்தியில் உள்ள அனைத்து காசநோயாளிகளையும் அடையாளம் கண்டு அவர்கள் தமது சிகிச்சையை சரியாக மேற்கொள்ள வேண்டிய ஒத்துழைப்பை அனைவரும் வழங்குவதன் மூலம் இந்நோயை ஒழிக்க முடியும்.

# மக்களின் வயிற்றிலேயே அடித்துகொள்ளும் விலை அதிகரிப்புகள்

மற்றுமொரு தடவை எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் குண்டூசி விலை முதல் அத்தனைப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது மக்கள் மீதான சுமையை இன்னும் அதிகரிக்கச் செய்துவிட்டது.

அதன்தாக்கத்தை மக்கள் தாங்கிக்கொள்வதற்கு 12.5 கிலோ கிராம் நிறையைக் கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 5,175 ரூபாயாகும் என்றோர் அறிவிப்பும் வெளியானது. எனினும், சமையல் எரிவாயு விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எப்படியோ காஸ் விலை அதிகரிக்கப் போவது மட்டுமே உண்மையாகும். அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின், அதுவும் மக்களின் வயிற்றிலேயே அடிக்கும். ஒரு பொருளுக்கு சந்தையில் தட்டுப்பாடு ஏற்படுமாயின், அந்தப் பொருள் பதுக்கிவைக்கப்பட்டு வேண்டுமென்றே தட்டுப்பாடு செய்யப்படுகின்றது என்பதே இலங்கையில் நிலைமையாகும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பால் விழுந்த மக்கள், மீண்டெழுவதற்கு முன்னரே, மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாய், பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனிடையே பருப்பின் விலையும் அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 24 மணிநேரத்துக்குள்ளும் ஏதாவது ஒரு பொருளின் விலை அதிகரிப்பே செய்தியாக வருகின்றது. விலை அதிகரிப்பை தாங்கிக்கொள்ள முடியாது கொதித்துக்கொண்டிருக்கும் மக்களை இன்னும் கொதிப்படைய செய்யும் வகையிலேயே விலைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் மற்றும் அங்காடிகளில் இறாக்கைகள் வெறிச்சோடி கிடக்கின்றன. பொருட்களைத் தேடி அலைந்து திரிவதை விடவும் இருப்பதைக் கொண்டு சமாளித்துவிடுவோம் என்ற எண்ணம் பலரிடத்திலும் தோன்றிவிட்டது.

எனினும், வேலைவாய்ப்புகளைத் தேடி பெரும் நகரங்களுக்கு வந்திருப்போரின் நிலைமைதான் இன்னுமின்னும் மோசமடையும். மூவேளையும் ஹோட்டல்களை நம்பியிருக்கும் பலரும், இரண்டொரு வேளை மட்டும் உண்ணுகின்றனர். உணவுப் பண்டங்களின் விலைகளும், உணவுப் பொதிகளின் விலைகளும் இன்னுமின்னும் அதிகரித்துள்ளன; அளவும் குறைந்துவிட்டது. எரிபொருட்களின் விலையேற்றத்தை அடுத்து, பொருட்களின் விலைகளும் சேவைகளின் விலைகளும் கிடுகிடுவென எகிறின. இன்னுமின்னும் விலைகள் அதிகரிக்குமாயின், மக்களால் தாங்கிக்கொள்ளவே முடியாது.

வருமானம், மேலதிக வருமானங்கள் எவையுமின்றி வாழ்க்கையை கொண்டுநடத்துவோரின் நிலைமை பரிதாபமானது. நாள் கூலிகளின் நிலைமையை விளங்கப்படுத்துவதற்கு சொற்களே இல்லை.

நிலைமையை பார்க்குமிடத்து இன்னுமின்னும் மோசமடையும் சாத்தியக்கூறுகளே தென்படுகின்றன. கிடைக்கும் வருமானத்தை கொண்டு சீவியம் நடத்தமுடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையெனில், மக்கள் வீதியிலேயே நின்றுவிடுவர் என்பதில் ஐயமில்லை. உடலுக்குத் தேவையான ஊட்டசத்துள்ள உணவுகளை ஒருவேளை உணவிலேனும் சேர்த்துக்கொள்ளவில்லை எனில், எதிர்கால சந்ததியினரின் நிலைமை கேள்விக்குறியாகிவிடும். ஆகையால், வயிற்றிலேயே அடிப்பதை நிறுத்த, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதே உசிதமானது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எந்த நாட்டில் நாம் வாழ்கின்றோமோ, அந்த நாட்டுக்கு விசுவாசமாக இருக்கவேண்டும். அதற்காக தாய் நாட்டை மறக்க வேண்டியதில்லை. எம்மவர்களில் அநேகர் வெளிநாடு சென்றதும், தங்கள் பிள்ளைகளை அந்த நாட்டின் கலாசாரத்துடனும் இணைந்துகொள்ளத் தூண்டுகின்றனர். ஆனால், சில பெற்றோர்கள் எமது கலாசாரப் பண்பை ஊட்டி வருகின்றமையை மறுக்க முடியாது. எனினும், அடுத்தடுத்த பரம்பரையிடம் எமது கலாசாரம், பண்பாட்டின் நிலை என்ன? அவர்கள் தாய் மொழியைப் பேசத்தெரியாமல் போகலாம். எனவே, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு தாய் நாட்டை காட்டுவதுடன், சமய, கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றத் தூண்டுவதும் முக்கியமானது. இன்று எமது பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்தபடியே, இசை, நடனம், விளையாட்டுத் துறைகளில் சாதனை படைத்துவருகிறார்கள். கல்வியில், உயர்பதவிகளில் உலகை வியக்க வைக்கின்றார்கள். இதற்குக் காரணம் பெற்றோரே!

எல்லா நாடுகளும் தங்கள் பாரம்பரியங்களை விட்டுவிடுவதில்லை. எமக்கும் நாட்டுப்பற்று உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## பிரச்சினைகளால் பற்றி எரியும் நாடு:

# தமிழ் மக்களின் நிலைப்பாடு

**லக்ஸ்மன்**

நாடு பற்றி எரியும் வேளையில் நீரோ மன்னன் பிடில் வாசித்ததற்கு ஒப்பாக, தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் தற்போதைய நெருக்கடிச் சூழலைக் கையாளுதலை அல்லது கணக்கற்று இருப்பதை அவதானிக்க முடிகிறது. பொருளாதாரப் பிரச்சினைகளால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அது குறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு சரியா, தவறா என்பதான கேள்விகளுக்கு இதுவரையில் சரியான பதில்கள், முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த இடத்தில்தான், ஒரு தேசமாக தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான தமிழர்களின் நீண்டகாலக் கேள்விக்கு, இன்று தெற்கில் இடம்பெறும் போராட்டங்களில் பதிலேதும் உண்டா என்று தமிழர் தரப்பின் வினவல் நெருடலாகின்றது.

இலங்கையில் யுத்தம் தானாக ஆரம்பித்ததல்ல. அது, தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது என்பதுதான் வரலாறு. ஆனாலும், இன்று தெற்கில் போராடிக் கொண்டிருக்கும் பொதுமக்கள், இளைஞர்களுக்கு தம் தோழமையை தமிழர்கள் இப்போது கொடுக்காமலில்லை. இருந்தாலும் அடிப்படையை உணர்ந்தார்களா என்பதற்கான சரியானதொரு பதில் கிடைக்கவேண்டுமென்றே தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்புத் தவறானதல்ல.

பெரும்பான்மை மக்களின் பெரும்பகுதியினர் போராடப் புறப்பட்டதற்கான காரணமான பொருளாதார நெருக்கடிகள் தமிழர்களையும் தாக்காமலில்லை. ஆனால், அவற்றைச் சகித்துக்கொண்டே ஆகவேண்டும் என்ற பக்குவத்தில் தமிழர்கள் இருக்கிறார்கள். நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் பிறந்தவர்கள் இந்தச் சகிப்பினை கைக்கொள்ள கொஞ்சம் சிரமப்படத்தான் செய்வார்கள்.

எது எவ்வாறாக இருந்தாலும், அயலிலுள்ளவர், நம்முடன் உள்ளவர்களுக்கு இன்னல்கள் ஏற்படும்போது அதனைத் தீர்த்துவைக்க அல்லது கைகொடுக்காதவர்களை மனிதர்களாகவோ சகபாடிகளாகவோ யாரும் எண்ணுவதில்லை. அந்தவகையில், தமிழர்களுக்கு இருக்கின்ற மனத்தடையைத் தீர்க்கவேண்டியது நாட்டிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்துக்குள்ளது என்ற பொறுப்பையே தமிழர்கள் கோருகின்றனர். இந்த ஆத்மாத்தமான கோரிக்கையைத் தவறாக எண்ணிவிடமுடியாது.

தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் பொதுமக்கள் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கொள்வதற்கு தமிழர்களின் அரசியல் தரப்புகளும், சிவில் அமைப்புகளும் முயன்றே வருகிறார்கள். இந்த முயற்சிகளுக்குத் தடைகள் வராமலில்லை. அதற்கு பட்டறிவுகளுடனான அனுபவங்களே காரணம்.

இதில்தான், காலி முகத்திடலில் இருந்து முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் இன்றைய பொருளாதாரச் சிக்கல்களுக்கு உண்மையான அடிப்படைக் காரணமான சிங்கள -பௌத்த மேலாதிக்க அபிலாஷைகளுக்கு மாற்றீடுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பதும், வெறுமனே நாட்டில் ஆட்சி மாற்றம் தமிழருக்கு அமைதியையும் நிம்மதியையும் கௌரவத்தையும் தந்துவிடப் போவதில்லை என்ற விடயம் சிக்கி நிற்கின்றது,

இந்த வகையில் தான், தமிழ்த் சிவில் சமூக அமையத்தின் 'அண்மைய நாள்களில் தென்னிலங்கையில் முகிழ்த்து வரும் பொதுமக்கள் போராட்டங்களுக்கான ஆதரவைத் தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது' என்ற அறிக்கையும் முக்கிய பார்வைக்குரியதாகின்றது.

இந்தப் பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் பட்டிணியை தமது அன்றாடமாக்குகின்ற நிலைமை உருவாகிவருகின்ற நிலையில், இந்த நெருக்கடிக்கு இன்றைய அரசாங்கம் மாத்திரமே காரணம் என்று அதனை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றுவதால் தீர்வு வந்துவிடாது என்பதும் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

அதில்தான், அடிப்படைக் காரணமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, போராட்டத்தின் முதற் கோரிக்கையாக அமைய வேண்டும் என்பது முன்னகருகின்றனது.

இப்போது காலி முகத்திடலிலே சிங்கள இளையோர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் கோரிக்கைகளில், பொருளாதார வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற விடயம் முதன்மையான கோரிக்கையாக அமைந்திருக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வே, நாட்டின் மீட்சிக்குரிய ஒரே வழி என்பதும் அதன் அடிப்படையும் தெரிந்திருந்தாலும், அதனை வெளிப்படையாக பொறுப்புடன் ஏற்றுக்கொள்ள யாரும் தயாரில்லை.

உண்மையிலேயே இந்த நாட்டில், தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதும், அதன் காரணமாக ஏற்பட்ட யுத்தமும், யுத்தத்தின் காரணமமாக பில்லியன் கணக்கான டொலரை வெளிநாடுகளிடம் கடனாகப் பெற்றமையானது நாட்டுக்குப் பெரும் சுமையே. இந்தச் சுமையைத் தூக்குவதற்கு தமிழ் மக்கள் மீது போராட்டத்தினை திணித்த அனைவரும் தயாராக வேண்டும்.

அதனை விடுத்து, தற்போதைய அரசாங்கத்திடம் மாத்திரம் அதனை விட்டுவிடுவது எவ்வகையில் நியாயம் என்பது ஆட்சித் தரப்பின் கேள்வியாக இருக்கவேண்டும். ஆனால், அதனை அவர்கள் இன்னமும் வெளிப்படையாகச் செய்யவில்லை.

ராஜபக்ஷ குடும்பம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற அடிப்படையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்; ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவிகளைத் துறக்க வேண்டும். ராஜபக்ஷ குடும்பத்தினர் எவருமே பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடாது. ராஜபக்ஷ குடும்பத்தால் அபகரிக்கப்பட்ட சொத்துகள் மீளப்பெறப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளே போராட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இது ராஜபக்ஷ குடும்பத்தின் மீதான கோபமாகவே பார்க்கப்படவேண்டும்.

ஆனால், இதனால் உருவாகின்ற மாற்றம் நாட்டை மீட்டுவிடுமா என்றால் அது சந்தேகமாகவே இருக்கும். வெறுமனே ராஜபக்ஷ குடும்பத்தினை மாத்திரம் வெளியேற்றிவிட்டால் நாடு மீண்டுவிடுமா?

நாடு பொருளாதார ரீதியாக மிகவும் அதளபாதாளத்துக்குள் விழுந்து கிடக்கின்றது. இலங்கை தற்போது இருக்கும் பொருளாதார நிலைமையை எந்தக்கட்சியோ, நபரோ ஆட்சிக்கு வந்தாலும் உடனடியாக நிமிர்த்திக் கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. இந்த உண்மையை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போது அன்றைய நிலையில் எல்லோரும் நிம்மதி ஏற்பட்டுவிட்டதாகவே எண்ணினர். அன்று நாட்டில் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட்டிருந்தால் இந்த நாட்டில் 30 வருடங்களுக்குமேல் யுத்தமும் இடம்பெற்றிருக்காது. அழிவுகள், பொருளாதார இழப்புகள் ஏற்பட்டிருக்காது. தமிழ் மக்களின் மனங்களில் இவ்வளவான வெறுப்பும் பட்டிறிவும் பதிந்தும் இருக்காது.

அத்தோடு, யுத்தத்திற்காக மாறி மாறி வந்த அரசாங்கங்கள் டொலரைச் செலவு செய்ய வேண்டிய தேவையும் இருந்திருக்காது. ஆனால், நடந்தது என்னவோ வேறு. தொடர்ச்சியாக, இப்போதும் இனவாதம் ஊட்டி வளர்க்கப்படுகின்ற இளைஞர்களையே நாம் காண்கிறோம். அதனை அடிப்படைவாதிகளும், அரசியல் கட்சிகளும் செய்தே வருகின்றன.

இந்த இடத்தில்தான், யுத்தத்திலும், அதற்கு முன்னரும், பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்கள் 1,800 நாள்களையும் தாண்டி இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் போராட்டத்தில் எமது தமிழ் இளைஞர்களின் பங்கு என்ன? எமது தமிழ் இளைஞர்கள் காலி முகத்திடல் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என எங்கள் மக்களின் பிரதிநிதிகளே அறைகூவல் விடுக்கின்றனர். இவ்வாறு அறைகூவல் விடுபவர்கள் எமது உறவுகளின் போராட்டத்தில் இளைஞர்களை உள்வாங்குவதற்கு எவ்வித அக்கறையும் அற்றவர்களாகவே செயற்பட்டிருக்கின்றார்கள்.

சிங்கள மக்கள் மின்சாரம், எரிபொருள், போன்ற பொருட்கள் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் போராடுகின்றார்களே தவிர, பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டமைக்கான முல காரணத்தைக் கண்டு பிடித்து, அதனை நிவர்த்தி பண்ணுவதற்கு எந்தவிதமான எத்தனிப்பும் காட்டவில்லை. இந்த விடயத்தில், நாங்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும் என்ற தமிழ்த் தரப்பின் கேள்வி நியமானதாகவே இருக்கிறது எனலாம்.

அதே நேரத்தில், தமிழ் மக்களுடைய அரசியலை நகர்த்துகின்ற தரப்புகளின் ஒருமிப்பின்மை, தமிழ் மக்களை மேலும் பிரித்து வைத்தே வருகிறது.

மொத்தத்தில், அரசியல் பாரபட்சம், இனப்பாகுபாடு, தரப்படுத்தல், நெருக்கடிகளால் நாட்டைவிட்டு வெளியேறிக்கொண்டே இருந்த மூளை சாலிகள் இன்றும் வெளியேறிக்கொண்டே இருக்கிறார்கள்.

நாட்டின் பாரபட்சம் இல்லாமலாக்கப்படவில்லை. தமிழ் மக்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவில்லை. இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுத்துவதற்கான தீர்க்கமான செயற்பாடில்லை.

இவ்வாறிருக்கையில், தமிழ் மக்களுக்கு வேறு என்னதான் நிலைப்பாடு முடிவிருக்கமுடியும். ஆனாலும், தமிழர்களாகிய எம்முடைய நிலைப்பாடு வேறாக இருந்தாலும் இந்தச் சூழலில் 'பிடில்' வாசித்த கதையாக இருப்பது பொருத்தப்பாடற்றதே.

## கடிதங்கள்

### அச்சமின்றி சிகிச்சை பெறும் சூழலை உருவாக்குங்கள்

அக்கராயன் மருத்துமனையின் வைத்தியர் விடயத்தில் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்களும் வைத்தியர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த பிரதேச பொது மக்களின் நலன் கருதி, விபரீதங்கள் எவையும் இடம்பெற முன்னர் பொருத்தமான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ளுமாறு பொது மக்கள் வலியுறுத்தியுள்ளனர். அக்கராயன் வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரின் செயற்பாடுகள், வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் இது தொடர்பில் பிரதேச மக்கள் தங்களின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவிக்கும் பெயர் குறிப்பிட விரும்பாத வைத்தியர்கள் தாங்களும் குறித்த விடயம் தொடர்பில் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளதாகவும், ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கவலைதெரிவித்துள்ளனர். பொது மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளாத சுகாதார திணைக்களத்தின் ஏனைய பணிகளுக்கு குறித்த வைத்தியரை பயன்படுத்துமாறும், அத்தோடு அவருக்கு சுகவீனங்கள் இருப்பின் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பரிந்துரைத்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இதுவரை தமது கோரிக்கை தொடர்பில் சம்மந்தப்பட்ட தரப்பினர்கள் எவரும் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை எனவும் இதனால் எதிர்காலத்தில் ஏதேனும் விபரீதத்துக்கு இட்டுச் செல்லும் நிலைமையை உருவாக்கிவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளதாவும் பொதுமக்களும் வைத்தியர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

– மு. தமிழ்ச்செல்வன்

# கலைகள் சமூகங்களின் அடையாளங்கள்







ஏ.எல்.எம். ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலமான 13 பிரதேச செயலகங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட, உதவி அவசியமான 81 கலைஞர்களுக்கான வருடாந்த உதவித்தொகை வழங்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சன் ஒருங்கிணைப்பில் நிந்தவூர் பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஐ.எம். முஹம்மட் ஷரீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

'அமைதியான, ஒழுக்கமான, முழுமையான சிறந்த மனிதர்களைக் கொண்ட புனித தேசத்தை ஒன்று சேர்ந்து கட்டியெழுப்புவோம்' எனும் உயர்ந்த நோக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு ஒன்றிணைந்து பயணித்த , பயணிக்கின்ற கலைஞர்களில் உதவி அவசியப்படுகின்ற மூத்த கலைஞர்களை இனம்கண்டு அவர்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் வருடத்திற்கு ரூபாய் 10,000.00 நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மொழி மூலமான 81 கலைஞர்களுக்கான காசோலை வழங்கிவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இங்கு உரையாற்றும் போது, “கலைஞர்கள் சமூகத்தின் அடையாளங்களாக இருக்கிறார்கள். கலைத்துறையை அல்லது கலைஞர்களுடைய செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக கலாசார அலுவல்கள் திணைக்களம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து பிராந்தியத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. உண்மையில் நமது கலைகள் என்பது நமது சமூகங்களின் அடையாளங்களாக காணப்படுகின்றன. இந்தக் கலைகளை மூத்த கலைஞர்கள், இளைய கலைஞர்களை நோக்கி கொண்டு செல்லவேண்டிய பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே எமது கலைகளை எமது இளைய சமூகத்திற்கு நாம் சொல்லிக் கொடுக்க வேண்டும்.







அவற்றின் ஊடாக எமது சமூக அடையாளமாக இருக்கின்ற கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

“மாற்றங்கள் என்பது ஆண்டாண்டு காலமாக தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஆனால், நமது கலைகள், நமது பாரம்பரிய பண்பாடுகள் மாறுபடாமல் முன்கொண்டு செல்லப்பட வேண்டும். அப்போதுதான் எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களை நாம் பாதுகாக்க கூடியதாக இருக்கும்.

“இன்று மாற்றங்கள் என்ற போர்வைக்குள் பல நவீன கலாசார பண்பாடுகள் ஊடுருவி இருக்கின்றன. ஆனால், எமது பண்பாடு, கலாசாரம், சமூக வாழ்வியல் அம்சங்களை பிரதிபலிக்கின்ற கலைகளை நவீன வளர்ச்சி முறைக்குள் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு கலைஞர்களுக்கு இருக்கின்றது.

“அதேபோன்று சான்றுப் படுத்தல் என்பது முக்கியமாகும். சான்றுப்படுத்தல் எனும்போது, எமது கலைகள் அழிந்து செல்லாமல் அவற்றைப் பாதுகாப்பதற்கான முறைமையை குறிக்கின்றது .எம்மிடமிருந்து பல கலைகள் மறைந்து போனமைக்கு காரணம் அவைகள் சரியாக சான்று படுத்தப்படவில்லை. எனவே இந்தக் கலைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முக்கியமானதாகும். உதாரணமாக, நமது முன்னோர்களுடைய வாழ்வியல் அம்சங்கள் அது விவசாயமாக அல்லது மீன்பிடி, கல்வித்துறை, தொழில்நுட்பம் எதுவானாலும் அல்லது அதற்காக பயன்படுத்திய கருவிகளாக கூட இருக்கலாம்; இவைகள் பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமாகும்.

“நமது முன்னோர் வயல்வெளியில் ஒன்றுகூடி சூடு அடிப்பது, சூடு வைப்பது அதேபோன்று தென்னை ஓலைகளை பின்னுவது, அல்லது தென்னை ஓலைகளில் குடிசைகளை அமைத்து கொள்வது போன்றன இன்று அழிந்து வருகின்ற விடயங்களாகும். இவைகளை பாதுகாக்கின்ற முறைகள் நம்மிடம் இல்லாமல் இருக்கிறது. அவற்றை நாம் உருவாக்க வேண்டும். மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளில் அங்கு வாழ்கின்ற மக்கள் பயன்படுத்திய அல்லது அவர்களுடைய வாழ்வியல் அம்சங்களை புடம் போட்டு காட்டுகின்ற இதுபோன்ற விடயங்களை கிராம ரீதியாக அங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

எமது பிராந்தியத்திலும் கலைகள் அல்லது கலைஞர்கள் அவர்களுடைய வாழ்வியலோடு மறைந்து செல்லாமல் அந்தச் சமூகத்தின் அடையாளங்களாக தொடர்ச்சியாக பாதுகாப்பதற்காக தேவையான விடயங்களை இங்கு இருக்கின்ற மூத்த கலைஞர்கள் மேற்கொள்ள வேண்டும்” என்று தெரிவித்தார்.



# உலகத்தை காப்பாற்றுவோம்

## நேற்று (22) சர்வதேச பூமி தினம்

நாம் வசிக்கும் இந்தப் பூமியின் நலனை பாதுகாப்பதற்காகவும் அதைப் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் விதமாகவும் பூமி தினம் நேற்று (22) கடைப்பிடிக்கப்பட்டது.

சூரிய குடும்பத்தில் உள்ள ஒரே உயிர்க்கோள் பூமி. பூமியின் சாயலில் பல கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், இதுவரை பூமியைத் தவிர வேறு எந்தக் கோளிலும் உயிரினங்கள் இருந்ததாக கண்டுபிடிக்கப்படவில்லை.

வேற்றுக் கிரகத்தில் குடியேற்றங்களை நிறுவும் முயற்சியும் இன்னும் சாத்தியமாகவில்லை. செவ்வாயில் மனிதன் குடியேறும் திட்டம் நிறைவேறவும், இன்னும் நிறைய சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே பூமியே நமக்கு கிடைத்த வரப்பிரசாதம். மரங்களை அழிப்பதாலும், பிளாஸ்டிக், பெட்ரோல் போன்றவற்றாலும் பூமியின் சுற்றுச்சூழல் மாறிவருகிறது. பூமியின் சுற்றுச்சூழல் மாசுபடாமல் காப்பதன் மூலமே, நாம் இங்கு நிம்மதியாக வசிக்கலாம். அதை வலியுறுத்தவே பூமி தினம் அனுசரிக்கப்படுகிறது.

1969இல் நடந்த யுனெஸ்கோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, 1970ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி முதன்முதலில் பூமிதினம் கடைப்பிடிக்கப்பட்டது. அமெரிக்கா, பூமி தினத்துக்கு தனி தினம் ஒதுக்கக் கோரி, ஏப்ரல் 22ஆம் திகதியை பரிந்துரை செய்தது. 1990 முதல் ஏப்ரல் 22ஆம் திகதி பூமிதினமாக அனுசரிக்க ஐ.நா சபையும் ஒப்புதல் அளித்தது. 2009ஆம் ஆண்டு ஐ.நா சபை பூமிதினத்தை, சர்வதேச தாய்பூமி தினமாக அறிவித்தது.

மரங்களை நட்டும், கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்தியும், கடல்பரப்பை சுத்தம் செய்தும், கையெழுத்து போராட்டம் நடத்தியும் சுற்றுச்சூழலுக்கான திட்டமிடல் செய்தும் பூமிதினம் கொண்டாடப்படுகிறது. பாடசாலைகளில் பூமி வாரமாக அனுசரித்து, பூமி பற்றிய பாடங்களையும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்துகிறார்கள்.

### வெப்பநிலை உயர்வு

கடந்த சில தசாப்தங்களாக உலகத்தின் சராசரி வெப்பநிலையில் உயர்வு ஏற்பட்டுவருகிறது. இதனால் வெப்பமும் குளிரும் அதிகரித்துச் செல்கிறது. உலகின் தட்பவெப்பம் உயரும்போது, குளிரைவிட வெப்பமே கூடுதலாக அதிகரிக்கிறது. அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனில் 2000ஆம் ஆண்டிலிருந்து கடும் வெப்பமும் கடுங்குளிரும் 7/1 என்ற விகிதத்தில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. கடந்த 21 ஆண்டுகளாக, உலக அளவிலும் கிட்டத்தட்ட இதே விகிதத்தில் அதீத பருவநிலை மாற்றம் இருப்பதாக உலக வானிலை ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



### கடுங்குளிர்

உலகின் வடதுருவத்தில் வழக்கத்துக்கு மாறான கடுங்குளிர் தற்போது நிலவிவருகிறது. இதற்கு முக்கிய காரணம், ஆர்க்டிக் பகுதி, ஏனைய வடதுருவப் பகுதிகளைவிட இரு மடங்கு சூடாகுவதாகும் எனக் கருதப்படுகிறது. விஞ்ஞானிகள் ஜெனிபர் பிரான்ஸிஸ், ஸ்டீபன் வேவ்ரஸ் ஆகியோரின் ஆராய்ச்சி முடிவுகளின்படி, ஆர்க்டிக் பகுதியில் கோடைக்காலத்தில் வேகமாக உருகும் பனிக்கட்டிகளும் பூமியிலிருந்து ஆர்க்டிக் கடலுக்குத் தொடர்ச்சியாகச் செலுத்தப்பட்டுவரும் வெப்பமும், 1980களிலிருந்து காற்று மண்டலத்தின் போக்கில் மோசமான விளைவுகளை ஏற்படுத்திவருவதை அறியக் கிடைத்தது.

ஆகவே, வெப்பநிலையில் ஏற்படும், தீவிரமான ஏற்றத்தாழ்வுகள் இயல்பானவை அல்ல. அதற்குப் பூமி வெப்பமாதலும் ஒரு காரணம் என்பதும் மேற்சொன்ன ஆராய்ச்சிகளின் முடிவுகளிலிருந்து புலப்படுகிறது.

### வெள்ளமும் வறட்சியும்

பூமி வெப்பமாதலின் விளைவாகப் பூமியின் வட அரைக்கோளத்தில் நீண்ட கோடைக்காலமும் அதிக மழைப்பொழிவும் இருக்கும் எனப் பெரும்பாலான பருவநிலை மாதிரிகள் கணித்துள்ளதாக ஐ.நாவின் பருவநிலை மாற்றத்துக்கான சர்வதேசக் குழுவின் (IPCC) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவையான ஈரப்பதமின்றிக் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் நிலப்பகுதியில் நிலவும் அதிக வெப்பநிலை, காற்றுமண்டலம் அதிக அளவு நீராவியைத் தக்கவைத்துக் கொள்வதாலும் மண் வறண்டு போய் வறட்சி ஏற்படுகிறது. உலகில் 1970லிருந்து பல பகுதிகள் வறண்டு போனதற்கும், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட காட்டுத்தீ நிகழ்வுகளுக்கும் பூமி வெப்பமாதல் ஒரு முக்கிய காரணம்.

அதேவேளையில், கடந்த சில ஆண்டுகளாக உலகின் கடல் பகுதிகளும் சூடாகி வருகின்றன. உலக அளவில் மிகப் பெரிய பவளத்திட்டுகள் இறந்து கொண்டிருக்கின்றன. கடலில் இருந்து அதிக அளவில் ஆவியாகும் நீரானது, சூடான காற்று மண்டலத்தில் சேர்வது அதிகரித்துக்கொண்டே போகிறது. இதனால் காற்று மண்டலத்தில் உள்ள நீரின் அளவு, 1970களில் இருந்ததைவிட நான்கு சதவீதம் தற்போது அதிகரித்திருக்கிறது.

ஒரு கட்டத்தில், உலகில் ஏதோ ஒரு நிலப்பகுதியில் பெரும் மழையாகவோ, கடும் பனிப்பொழிவாகவோ இந்த நீர் பொழியப்பட்டு, பெரும் வெள்ளத்தையோ அசாதாரண சூழ்நிலையையோ ஏற்படுத்துகிறது. இதைத்தான் “...தற்போது நிகழும் வானிலை பேரிடர்கள் பருவநிலை மாற்றத்தால் நிகழ்ந்தவைதான்; ஏனென்றால், முன்பைவிட புறச்சூழல் வெப்பமாகவும் ஈரப்பதம் மிக்கதுமாக இருக்கிறது” என்று விஞ்ஞானி கெவின் ட்ரென்பெர்த் கூறுகின்றார்.

இதற்கெல்லாம் காரணம் பூமி வெப்பமாதல்தான். பூமி வெப்பமடைவதற்கு மனித இனமே முதன்மைக் காரணம் என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். புதைபடிவ எரிபொருட்களான பெட்ரோல், டீசல், நிலக்கரி முதலியவற்றை எரிப்பதால் வெளியாகும் கரியமில வாயு, புறச்சூழலில் அதிகரிப்பதாலேயே பூமி வெப்பமடைகிறது.

தற்போது, உலகம் சந்தித்துள்ள நெருக்கடி நிலை, இதற்கு முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை என்பதால், இது மனித நாகரிக வளர்ச்சியால் ஏற்பட்ட விளைவுதான் என்பது தெளிவாகிறது.

> **“பொருளாதார வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், இயற்கைக்கு இணக்கமான வளங்குன்றாத வளர்ச்சி முறைகளைப் பின்பற்ற வேண்டும்**

உலகில் உள்ள அனைவரும் கரியமில வாயு, மீதேன் போன்ற வாயுக்களின் வெளியேற்றத்தைப் பெருமளவு குறைக்க வேண்டும். பொருளாதாரத்தில் உயர்ந்த நாடு, வளர்ந்து வரும் நாடு என்ற பாகுபாடெல்லாம் புயலுக்கும் வெள்ளத்துக்கும் கிடையாது.

காலநிலை மாற்றத்தால் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்படும் பாதிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆகவே, உலகில் உள்ள அனைவரும் புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாடு, கார்பனை அதிகமாக வெளியிடும் செயற்பாடுகளை வெகுவாகக் குறைத்துக்கொண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ஆற்றல் பயன்பாட்டில் சிக்கனம், கார்பன் சேகரிப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதார நடைமுறைகளை உருவாக்கிச் செயற்பட வேண்டும்.

இந்தக் கணத்திலிருந்து நாம் ஒவ்வொருவரும் பொறுப்பான முறையில் செயற்பட்டால், வாயுக்களின் வெளியேற்றத்தை நிச்சயமாகக் கட்டுப்படுத்தவும், இயற்கைப் பேரிடர்களின் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். காட்டுப் பகுதி, நீர்நிலைகள், இயற்கையான புல்வெளிகள், சமவெளிகளை மதித்துப் பாதுகாக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், இயற்கைக்கு இணக்கமான வளங்குன்றாத வளர்ச்சி முறைகளைப் பின்பற்ற வேண்டும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், வறட்சி முதலிய இயற்கைப் பேரிடர்களை உணர்ந்தே இவற்றை நாம் புரிந்துகொண்டிருக்க வேண்டும். காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இதுபோன்ற கடுமையான பாதிப்புகளைக் கட்டுப்படுத்தவும் எதிர்கொள்ளவும் பூமிப்பந்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் விரைந்து செயலாற்ற வேண்டும். அது மட்டுமே உலகைக் காப்பாற்ற ஒரே வழி!






## ‘எங்கள் கிரகத்துக்கு முதலீடு செய்வோம்’

எம்.யூ.எம். சனூன்

“எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள்” எனும் தொனிப்பொருளில் சர்வதேச புவித்தினம் புத்தளம் மணல்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் நேற்று (22) கொண்டாடப்பட்டது.

புவித்தினம் தொடர்பாக பிரதேச மக்களுக்கு விழிப்புனர்வை ஏற்படுத்துவதற்காக, மாணவர்கள் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் காட்சிப்படுத்தி இருந்தனர்.

இத்தினத்தையொட்டி மாணவர்களுக்கான சித்திரப்போட்டி, கட்டுரைப் போட்டிகளும் பாடசாலையின் நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. பாடசாலை அதிபர் ஏ.பீ.என் நிக்சன் நொயெல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வானது உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். துபைலின்வழிகாட்டலில் நடைபெற்றது.

1969ஆம் ஆண்டு அமெரிக்காவின் சென் பிரான்ஸிஸ்கோ நகரத்தில் யுனெஸ்கோ மாநாடு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக கலந்துரையாடலின்போது, புவியின் அழகை சிறப்பாகவும், மாசுபடுத்தாமல் பாதுகாக்கவும் மக்களிடையே விழிப்பனர்வை ஏற்படுத்துவதென்ற தீர்மானத்தை உலக அமைதிக்காக குரல் கொடுத்த மாமனிதர் ஜோன் மெக்கனல் என்பவரால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்கா சுற்றுச் சூழல் நிபுணரான கெலார்ட் நெல்ஷன் 1970ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி சுற்றுச்சூழல் பற்றி அறிவை பரப்புவதற்கு தகுந்த நாளாக பிரகடனப்படுத்தியதோடு, இந்நாளிலே மக்கள் அனைவரும் ஒன்றுதிரளுமாறும் கேட்டுக் கொண்டார். இந்நாளிலே புவியின் வட துருவ பகுதியில் வசந்த காலமாகவும் தென்துருவத்தில் இலையுதிர் காலமாகவும் ‘சமவிராக்காலம்’ காணப்பட்ட தினத்திலேயே சுமார் 175 நாடுகளின் ஒத்துழைப்போடு சர்வதேச புவித்தினம் கொண்டாடப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை வருடந்தோறும் ஒரு கருப்பொருளை மையமாக வைத்து இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

2022ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் ‘எங்கள் கிரகத்துக்கு முதலீடு செய்வோம்’ என்பதாகும்.

# கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு



சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை சிறப்பிக்கும் வண்ணமும், காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாகவும், காரைதீவு விளையாட்டுக் கழகம், விபுலாநந்தா சனசமூக நிலையம், காரைதீவு பிரதேச செயலகம், சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவை இணைந்து நடத்திய 24ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவில், கல்விச்சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, க.பொ.த உயர்தர பரீட்சையில் வைத்திய துறைக்கும் பொறியியல் துறைக்கும் தெரிவானவர்களும் கலைத்துறையில் 3ஏ சித்தி பெற்றவர்களுக்கும் சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்திபெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்களும் தகவலும்: காரைதீவு நிருபர் சகா)






# எழுத்தாளர்கள் கௌரவிப்பும் 'சாகரம்' வெளியீடும்










திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் வாழும் எழுத்தாளர்கள் கௌரவிப்பும் 'சாகரம்' மலர் வெளியீடும் 31- 03- 2022 வியாழக்கிழமை சம்பூர் கலாசார மண்டபத்தில், மூதூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில், இளைஞர் அபிவிருத்தி அகத்தின் அனுசரணையில் நடைபெற்றது.

மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ. அறூஸ் தலைமை தாங்கிய இவ்விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணனும் விசேட விருந்தினராக கிழக்குப் பல்கலைக் கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ. யோகராசாவும் கௌரவ விருந்தினராக திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல். தென்னக்கோன் உட்பட, மூதூர் பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாறக், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி முனவ்வறா நளீம் ஆகியோரோடு பிரதேச சபை உறுப்பினர்கள், எழுத்தாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர்கள் 22 பேரும் இளம் எழுத்தாளர்கள் 15 பேருமாக மொத்தம் 37 எழுத்தாளர்கன் கௌரவிக்கப்பட்டனர். மூத்த எழுத்தாளர்களுக்கு பொற்கிழியும் இளம் எழுத்தாளர்களுக்கு மூதூரின் சிறப்பாக 'முத்தூர்' விருதும் வழங்கப்பட்டது.

இதேவேளை, 37 எழுத்தாளர்களை பற்றிய சிறு குறிப்பு நூலாக 'சாகரம்' மலர் அமைந்துள்ளது. ஒவ்வொரு படைப்பாளியினதும் இலக்கியப் பிரவேசம், எழுத்தாக்கம், வெளியீடுகள், பாராட்டுகள், விருதுகள், பட்டங்களோடு அவர்கள் பற்றிய விவரங்களும் தரப்பட்டுள்ளன. குறிப்பாக, தேசிய மட்டத்தில் சாதனை புரிந்த பல எழுத்தாளர்கள் 'சாகரம்' மலரில் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள்.

(படங்களும் தகவலும்: அ. அச்சுதன்)

# ஈழத்து நவீன இலக்கியங்கள் படைப்பாளர்கள் - தடங்கள் நூல் வெளியீடு

பேராசிரியர் செ.யோகராசாவால் 76 நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளை உள்ளடக்கிய 'ஈழத்து நவீன இலக்கியங்கள் படைப்பாளர்கள் - தடங்கள்' நூல் வெளியீடு, 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் சி.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது.

நூலுக்கான முதல் பிரதியை சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி பெற்றுக்கொண்டதுடன், வெளியீட்டு உரையை த.மேகராசா, நூல் மதிப்பிட்டுரையை எழுத்தாளர் எம்.அப்துல் றஸாக் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் என பலமட்டத்தினரும் கலந்து கொண்டிருந்தனர். இந்நூலில் கவிதை, சிறுகதை திறனாய்வு, கட்டுரை, ஆய்வு, பாடல் போன்ற பல நூல்களின் முன்னுரைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்களும் தகவலும்: வ. திவாகரன்)










## அக்கரைப்பற்று அன்னை சாரதா கலவன் பாடசாலை:

# தசாப்த விழா

அக்கரைப்பற்று அன்னை சாரதா கலவன் பாடசாலையின் தசாப்த விழா, பாடசாலையின் அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள் மற்றும் கல்வி சமூகத்தின் முழுதான பங்களிப்புடன் பாடசாலையின் அதிபர் கே.கோமளம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதிகளாக திருக்கோவில் வலய கல்வி பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன் ஆகியோரும் விசேட அதிதிகளாக பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. குணாளன், ஓய்வு பெற்ற அதிபரும் பாடசாலையின் முதலாவது அதிபருமான பி. தணிகாசலம், உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. பரமதயாளன், திருக்கோவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். ரவீந்திரன், பொது சுகாதார பரிசோதகர் ப. கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், பாடசாலையின் தசாப்த விழா நினைவுப் பெயர்பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதன் பின்னர், மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் மேடையில் அரங்கேற்றப்பட்டன. குறிப்பாக, கண்ணகி வழக்குரை நாடகம், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கச் செய்தன. இதேநேரம் பாடசாலையின் முதல் அதிபராக நியமனம் பெற்று, பாடசாலை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பி. தணிகாசலம் பாடசாலை கல்வி சமூகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை வரலாற்றில் புலமைபரிசில் பரீட்சையில் அதிக புள்ளியினை பெற்ற மாணவி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் தொடர்ந்து கடந்த ஆறு வருடங்களில் புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த 92 மாணவர்கள் அதிதிகளால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(படங்களும் தகவலும்: வி. சுகிர்தகுமார்)












# துறவற தின விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் , காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம் நடத்திய சுவாமி விபுலாநந்தரின் துறவற தின விழாவில் அரங்கேறிய கலைநிகழ்ச்சிகள்...

(படங்களும் தகவலும்: காரைதீவு நிருபர் சகா)




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 23 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.